சுன்னாகம், மன்மத ஐப்பசி ௬ ★ (23-10-55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI - NATIONALIST TAMIL WEEKLY

மலர் 26 இதழ் 17 | தேசிய வார வெளியீடு ○ நிறுவியவர் : நா. பொன்னையா | தனிப் பிரதி சதம் 10

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள் விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

★ இங்குள்ள தெரு அறிவிப்புப் பலகைகளிலுள்ள ஆங்கில தமிழ்ப் பெயர்கள் தார் பூசப்பட்டு விட்டன.

# மொழிக்கொள்கையில் மாற்றமில்லை

## சிங்களமுந் தமிழும் அரசகரும மொழிகள்

## மேயர்பதவி நீக்கத்தில் வலதுசாரிகள் ஏமாற்றம்

கொழும்பு, 20-10-55

தேசிய மொழி சம்பந்தமாக எழுந்துள்ள கொந்தளிப்பும், குழப்பமும் நாட்டிலே அலைமோதிக் கொண்டிருக்கும் இச் சமயத்திற் சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபை கூடிற்று. இக் கூட்டத்தில் டக்டர் என்.எம். பெரேரா அவர்களின் சிங்களமுந் தமிழும் நாடெங்கும் சம அந்தஸ்துடன் அரசகரும மொழிகளாக அமைவதற்கு அரசியல் திட்டத்திலுள்ள பிரமாணச் சட்டத்தை உடனடியாகத் திருத்தவேண்டுமென்ற பிரேரணை ஆராயப்பட்டது.

இப் பிரேரணை சம்பந்தமாக முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் பேசும்போது சிங்களமுந் தமிழும் அரசாங்க மொழிகளாக நாடெங்கணும் விளங்குமெனக் கூறினார். அவர் தமது நீண்ட விரிவுரையிற் குறிப்பிட்டிருப்பதாவது: 1945ஆம் ஆண்டிலேயே தேசிய மொழிகளை அரசகரும மொழிகளாக்கும் கொள்கையை அரசாங்கசபை ஏற்றுக்கொண்டது. இக் கொள்கையில் ஏதாவது மாற்றம் செய்வதாயின், அது ஐக்கிய தேசியக் கட்சியின் மகாநாடு ஒன்றிலேயே நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டியதாகும்.

◆ ◆ ◆

எனவே, டக்டர் என். எம். பெரேரா அவர்களின் பிரேரணையை ஏற்றுக்கொள்வதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஓர் அங்கத்தவரால் சமர்ப்பிக்கப்படும் தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணையே போல் இது நிராகரிக்கப் படுகின்றது.

நாடு பலமுற்று முன்னேற்றமடைவதற்குச் சிங்களர் தமிழர் ஆகிய இருசாராரின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதெனவும் முதலமைச்சர் வற்புறுத்தியிருந்தார். மீண்டும் வியாழக்கிழமை சபை கூடியது.

### பாதுகாவல்

சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபையிலுள்ள கலரிகளிற் பெருந்தொகையினர் காணப்பட்டனர். மண்டபத்தின் உள்ளும் புறமும் பொலீஸ் பாதுகாப்புத் தாராளமாகக் கையாள ஏற்படுத்தப்பட்டது. பிற்பகல் இரண்டு மணிக்கு முன்னரே சபையைநோக்கிஜனத்திரள் சென்றுகொண்டிருந்த விடத்தும், அனைவரும் கல்லெறி தூரத்துக்கப்பாலேதான் நிற்கவேண்டியதாயிற்று.

### பிக்குகள் முன்னணி

தேசிய மொழிச் சிக்கல் மக்களைக் கலக்கி அடித்துக் கொண்டு வரும் இந்நாட்களில் ஒரு மொழிக் கோரிக்கையின் தொண்டர் நாயகர்களாகப் பௌத்த பிக்குகள் முன்னணியிலே நிற்கிறார்கள். மதத் தலைவர்கள் என்ற காரணத்தினால இவர்கள் தங்கள் செல்வாக்கைக் கேடுகெட்ட வழிகளிலே பிரயோகம் செய்வதில் எவ்வகையான தயக்கமும் காட்டாது செயலாற்றி வருகிறார்கள். கொம்யூனிஸ்ட் கட்சியினரின் கூட்டத்தைக் குழப்பியடித்தமையைத் தொடர்ந்து 16-10-55 ஞாயிறன்று, சகிக்க முடியாத கலகத்துக்கும் குழப்பத்துக்கும் இம் மதப் பெரியோர்கள்தாம் காரண கர்த்தாக்களாக இருந்தார்கள். நகரசபை மண்டபத்திலே நடைபெற்ற சமசமாஜக் கட்சி நடத்திய மொழிக் கூட்டத்திலேதான் இக் குழப்பங்கள் நடைபெற்றன.

### பற்று வெறி

சிங்கள மொழிமீது கொண்ட அளவுமீறிய பற்றுவெறியும், பௌத்த சமயிகள் என்று கூறிக் கொள்வோர் யாவருமே வெட்கப்படுமளவுக்குக் கேவலமாக நடக்கத்தூண்டியிருக்கின்றன, இப்பிக்குப் பிரானுர்களை. தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் எல்லாம் வேண்டியிருந்தது அன்றைக்குக் குழப்பம் விளைவித்த பெருங் கும்பலைச் சமாளிப்பதற்கு. அத்து மீறிய இனவெறி காரணமாக இலங்கைத் திருநாட்டை ஒரு இரத்தக் களரியாக்க முனைந்திருக்கிறார்கள். இந்தக் கலகக்காரர்கள். வெடிகுண்டு வீச்சு, கல்வீச்சு, என்பவற்றைப் படைக்கலங்களாகக் கொண்ட பௌத்த சாதுக்களின் கையிலே, நாட்டின் அமைதியும் சாந்தியும் அல்லோல கல்லோலப்படுவதைக் கண்டு சமாதானத்தில் நாட்டமுடையவர்கள் கவலைப்படுகிறார்கள்.


இதற்கிடையில் இங்குள்ள தெரு அறிவிப்புப் பலகைகளிலுள்ள ஆங்கில தமிழ்ப் பெயர்கள் தார் பூசப்பட்டு விட்டன. எதிர்க் கட்சிகளின் போட்டியிடா உடன்படிக்கைகள் தவிடு பொடியாகிவிட்டன. சிங்கள மொழி முன்னணி ஒன்று உருவாகி வருகிறது. இவைகளுக்கிடையில் நிச்சயமற்ற மொழிக்கொள்கை ஒன்றை வைத்துத் தாலாட்டிக் கொண்டு பேசாமலிருக்கின்றனர் ஆட்சியாளர்.




### மேயர் பதவி

கொழும்பு மேயரைப் பதவியிலிருந்து வீழ்த்துவதற்கு முனைந்துநின்ற வலதுசாரி நகரசபை உறுப்பினர்கள் கடைசி நேரத்திலே ஏமாந்தார்கள். மேயர் நீக்கத் தீர்மானத்தை உறுதிப்படுத்தப்படுவதற்கென க் கூடப்பட்ட இவ்வாரத்திய நகரசபைக் கூட்டம் ஒழுங்கற்றதெனத் தெரிவிக்கப்பட்டது. உறுதிப்பாட்டுத் தீர்மானத்தைப் பிரேரிக்கும் உறுப்பினர் அதற்குத்தக்க முன்னறிவிப்புத் தரத் தவறிவிட்டமையால், நகரசபை அமைப்பு விதிகளின்படி அன்று கூடிய கூட்டம்ஒழுங்குக்கு அப்பாற்பட்டதென்று எடுத்துக்காட்டப்பட்டது.

(தொடர்ச்சி 6ஆம்பக்கம் பார்க்க)



திரு. ஏ. அமிர்தலிங்கம்

●

அமிர்தலிங்கமும் வட்டுக் கோட்டைத் தொகுதியும் என்பதுபற்றி நமது அரசியல் நிருபர் எழுதியிருப்பதை 5ஆம் பக்கத்தில் காண்க

# சைவம் செழிக்கும் தமிழ்

## அமுதனைய அடிகளார் விரிவுரை

## மட்டக்களப்பு எங்கணும் வரவேற்பு

கிழக்குத்தபால் : : : ஊரி

மட்டக்களப்பு

ஈழத்திருநாட்டிற்கு எழுந்தருளிய அடிகள் தமது திட்டத்தில் மட்டக்களப்பினையும் சேர்க்க இடம்தந்து இரண்டு நாட்களை இங்கே செலவிட்டார்கள். மட்டக்களப்பில் நடந்த தமிழ் விழாவுக்கென முதன் முதல் ஈழம் வந்த இப் பெரியாருக்கு இது மட்டக்களப்பில் மூன்றாம்முறையாகும். எனினும் மக்கள் அன்னாரைக் காணவும், அவர்களது அருள்மொழிகளைக் கேட்கவும கரைகடந்த ஆசையுடன் திரண்டிருந்தனர். இம்முறை அடிகளார் மட்டக்களப்பின் தென்பகுதியிலும் வடபகுதியிலுமாகப் பல இடங்களுக்கும் அழைத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இந்தத் திட்டத்தினை நடத்திவைத்த வரவேற்புக்குழுவுக்கு பண்டித த. சபாபதி, திருவாளர்கள் க. நடராசன், வெ. திருநாவுக்கரசு ஆகியோர் தலைவர், செயலாளர், பொருளாளர்களாகத் தெரிவு பெற்றிருந்தனர்.


### தென்பால்

முதல் நாள் அடிகள் களுதாவளை, கல்லாறு, காரைதீவு, அக்கரைப்பற்று என்னும் கிராமங்களிலே வரவேற்கப்பெற்றனர். சைவமும் தமிழும் தழைக்க வழி செய்யவேண்டுமென்பதே அடிகளாரின் உயிர்த்துடிப்பான பேச்சாயிருந்தது. 'உலக மதங்களிலே பழமையானதாகிய சைவம்மட்டும் தனக்கென ஒரு அரசாங்கமின்றியிருக்கிறது. இந்த நிலை ஏன் ஒழியக்கூடாது' என்ற அடிகளாரின் தமிழ்க் குரல் எங்கும் கேட்டது! விபுலாநந்தர் பிறந்த காரைதீவு மக்களிடையே குன்றக்குடி அடிகள், ஈழத்து அடிகளை நினைத்துச் சிறிது நேரம் கண்ணீர் வடித்தார். அவ்வூரின் சைவப் பற்றினையும் விபுலாநந்த அடிகளைத் தந்ததின்மூலம் தமிழுலகிற்கு அது செய்துபோந்த பெருந் தொண்டினையும் அடிகள் பாராட்டினார்கள். அத்தோடு விபுலாநந்தர் நினைவாகத் தமது ஆதீனத்தின் பெயரால் எழுத்துப் பேச்சுப் போட்டிகளை வகுத்து வெற்றி பெறுவோருக்கு ஆறு தங்கப் பதக்கங்களை ஆண்டுதோறும் தாம் பரிசளிக்கப்போவதாகவும் அங்கே வெளியிட்டார்கள். அடிகளின் அன்றைய இரவினைப் பெற்ற அக்கரைப்பற்றிலே உள்ள இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் மாலை ஏழுமணிக்கு அடிகளாரின் தரிசனம் கிடைத்தது. திரள்திரளாக மக்கள் குழுமியிருந்தார்கள். பிறவிப் பெருங் கடலைத் தாண்டி அக்கரையை அடைந்து இறைவனருளைப் பற்றுதற்குதக்க இடமாக அக்கரைப்பற்றிருக்கிறது என்ற சிறந்த பொருள் தந்து அவ்வூர்ப் பெயரைப் பாராட்டி பேசும்போது அப்பர், சம்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் வாலிபர் சங்கம்
## மட்டக்களப்பு
## பேச்சுப் போட்டி

இச்சங்கம், பாடசாலை மாணவ, மாணவிகளுக்காகத் தமிழிற் பேச்சுப்போட்டியொன்று நடாத்தி இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கத் தீர்மானித்துள்ளது. இப்போட்டி 22-10-55 சனிக்கிழமை பி. ப. 4 மணி தொடக்கம் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறும். பரிசுகளை திருமதி ஏ. வி. எஸ். என். புள்ளநாயகம் அவர்கள் வழங்குவார்கள்.



# நமது வாசிகசாலை

**நாம் பயிற்றும் சிறுர்:** ஆசிரியர்: ஸூஸன் ஐஸக்ஸ் M. A. D. Sc. மொழிபெயர்த்தவர்கள்: இர. அப்ளாச்சாரியார் M. A. L. T. ர. இராமநுஜாச்சாரியார் M. A. வெளியீடு: ஓரியன்ட் லாங்மன்ஸ் லிமிடெட், 36 A. மவுன்ட் ரோடு, சென்னை 2. விலை; ரூபாய் 2-4-0.

மேலைத் தேசத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் கல்வி சம்பந்தமான நூல்கள் அளப்பில. அவற்றிற் சில கல்வியில் வல்ல அறிஞர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள. குழந்தைகளின் உளப்பாங்கறிந்து கல்வித் துறையில் அவர்கள் முன்னேற்றமடைய இன்று மேலைத்தேய உளநூலாசிரியர்கள் செய்யும் ஆய்வுகள் குழந்தைகளுக்குப் பெரிதும் ஆசி தருகின்றன. பற்பல சூழல்களிலுமுள்ள குழந்தைகளையும் உளநூலறிஞர்கள் அவதானித்து அவர்களின் கல்விக் குறைபாடுகளைப் போக்குவதற்குரிய பல ஆய்வுமுறைகளையும் ஓர்ந்திருக்கின்றனர். இத்தகைய கல்வித்துறை ஆராய்ச்சியில் மிக்க மேதாவிகளாகத் திகழ்பவர்கள் ஸ்பீயர்மன், பலாட், பேட், நன்போன்ருேர் பலர். இத்தகையோர் வரிசையிலே சேர்ந்தவர் ஸூஸன் ஐஸக்ஸ் அம்மையார். சிறுர் கல்விபற்றிய திறம்பட்ட பல ஆராய்ச்சிகளின் பயனுக இந்த உளநூற்றத்துவ ஆராய்ச்சி வல்லுனர் வெளியிட்டுள்ள நூல்களின் ஒன்றின் மொழிபெயர்ப்பே 'நாம் பயிற்றும் சிறுர்' என்னும் இந்த நூலகும. நமது சிறுவர்களே நாட்டின் பெறலரும் செல்வங்கள். அவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு இந்த நூல் பெரிதும் துணை செய்யும். ஏழுமுதல் பதினேராண்டுக் குழந்தைகள் மன வளர்ச்சியின சிறப்பியல்புகள் சிலவற்றை நாமறியச் செய்யுமாற்ருல் குழந்தைகள் நன்மைபெற ஆவன செய்யவே இவ்வம்மையார் இந்த நூலை எழுதியுள்ளார்.

பிள்ளைகளின் தரம் கண்டே அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். பிள்ளையின் உடல்வயதை விட்டு மனவயதையே தரம் வகுக்க ஆதாரமாகக் கொள்ளுதலால் குழந்தைக்கு அதன் தேவைக்கேற்ற போதனையைத் தர இடமேற்படும். மிகச் சமர்த்தரான பாலர்கள் சற்று வயது அதிகமான பாலர்களுக்கேற்ற யோசனைகளிலே தேறுகின்றனர், 8ஆம் ஆண்டுப் பாலன் 10ஆம் ஆண்டுக்கேற்பட்ட சோதனைக்கண் அனைத்துக்கும் விடையளித்தால் அவன் மனவயது 10 ஆகும். அவன் தன் வயதுக்கேற்பட்ட சோதனையிலே தவறி ஆரும் வயதுக்கேற்பட்ட சோதனைகளில் மட்டுமே தேறினுல் அவன் மன வயது 6 ஆகும். ஆரம்பப் பள்ளியில் பிள்ளைகளைத் தரம் வகுப்பதில் மிகப் பயன் தருவது மனவளர்ச்சி விகிதம என்று இன்று கண்டுபிடித்துள்ளார்கள். இரு பாலர்க்கிடையிலுள்ள நுண்ணறிவுத்திறன் வேறுபாட்டை குறிப்பிட மனவயதுசௌகரியமான முறையாகிறது.

நுண்ணறிவு ஈவு அல்லது மானத வளர்ச்சி விகிதம் என்ற அளவு மிகப் பயன் தருவதாகக் கண்டுபிடித்திருக்கிருர்கள். மனவயது 8 உள்ள இரு மாணவரிடையே மிக்க வேற்றுமைகளிருக்கலாம். இவ்விருவரில் ஒருவன் உடல்வயது பத்து மற்றவன் உடல்வயது 6. மனவயதுக்கும் உடல் வயதுக்குமுள்ள வித்தியாசத்தைப் பின்னமாக (மன வயது மேலெண்ணுகவும் உடல் வயது கீழெண்ணுகவும்) குறிப்பர். ஷெ இரு பிள்ளைகளில் முந்தியவன் மந்தத்தன்மை வாய்ந்தவன், பிந்தியவன் நுண்ணறிவுடையவன். இவ்விருவரும் ஒரேவகுப்பிலிருக்க நேர்ந்தால் பிந்தியவனுக்கு (நுண்ணறிவு மிக்கவனுக்கு) முந்தியவனுக்குரிய வகையிற் பாடம் நடாத்துதல் வீண்நேரக் கழிவாகும். ஆகவே ஒரேவகுப்பிலும் பிள்ளைகளின தரமறிந்து கற்பிக்காவிட்டால புத்தி தீட்சணியமுள்ள பிள்ளையின் காலம வீண்விரயமாகிறது. இவ்வண்ணமாகப் பற்பல ஆராய்ச்சி முறைகளில் ஈடுபட்டுள்ள அநூல்விற்பனரான கல்வியாளர் ஒரு பையன் காண்பிக்கும் அறிவுத்திறன் அவன் பிறவிப் பேறுகளையும் வீட்டிலும்பள்ளியிலும் கிடைக்கும வாய்ப்புக்களையும் சார்ந்தது என முடிபுசெய்கின்றனர். ஆக சமர்த்தான பிள்ளைக்குப் பண்ணி ஆசிரியர் கிடைப்பதிலும் நல்ல பெற்ருேரையடைப்பதே பெரும் பேறும அவசியமுமாகின்றது. (பக்கம் 30 பார்க்கவும்)

பிள்ளையைச் சும்மா இருத்திக் கற்பித்து மூளை வேலைகொடுத்தல் பயனற்றதாகும். இதனை இந்த நூல் நன்கு விளக்குகிறது. (பக்கம் 58, 59 பார்க்கவும்). ஆசிரியர் கொடுக்கும் விளக்கங்களெல்லாம் பொருத்தமான ஆராய்வின் பயனுகக் கிடைத்தனவாகும். இந்நூலாசிரியர் வற்புறுத்தும் சில முடிபுகள் வருமாறு:-

ஏழாம் ஆண்டிற்கு முந்திய கட்டுமல்லாமல் ஆரம்பப் பள்ளிப்பிராயம் முழுதும் பாலன் பூரண வளர்ச்சிக்கு அவன் செயல்களே திறவுகோலாகும்.

ஒவ்வொரு இடத்திலும் குழந்தையின் செயல்முறை சமூக அனுபவம் அவன் சிந்தனை பேச்சு ஆகியவை அவன் கல்விக்கு முக்கிய சாதனமாகும்.

குழந்தையினுடைய செயல்கள் சரித்திரமோ, பூகோளமோ, கணக்கோ, இயற்கைப்பாடமோ காட்சிப்பொருள்பற்றியோ செயல் முறையிலோ இருந்தால் (பிள்ளை பார்க்க, கையாள, ஆக்க, அளக்கக்கூடியனவுமாக இருந்தால்) அதிக பயன் கிட்டும்.

ஆரம்பப் பள்ளிக் குழந்தையின் பெரிய தேவை தனது அனுபவத்தைச் சொற்களில் உரைப்பதற்கும், வகுணிப்பதற்கும், தருக்கிப்பதற்கும் வாய்ப்புத் தருவது ஆகும். அவன் செய்வதற்குப் பதிலாக நாம் அவனுக்குச் சொற்கள் போதனையளித்தால், அவன் மனதை உயிரற்றதாக்கி விடுகிரேும்.

செயற்பாட்டின் உயிர் நாடி போன்ற அவசியத்தின் முழு உணர்ச்சியைப் பெற்ருற்ருன் பள்ளிக்கூடத்திலே தனிப்பட்ட முறைகளிலும் குழு முறைகளிலும் தகுந்த பயன்கள் கிட்டும்.

சிறுவர் கல்வியில் விருப்புடையோர் எவரும் அவசியம் வாசிக்கவேண்டிய நூல்களில் இது பிரதான இடம் வகிக்கிறது.

—போ. கி

●

**முப்பொருள் விளக்கம்:** எழுதியவர்: சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்; வெளியிட்டவர்: சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள், அச்சுவேலி, விலை: ரூபாய், 1-50

பதி, பசு, பாசம் எனப் பகரப்படும் முப் பொருள்கள்பற்றிய உண்மைகளைச் சைவ சித்தாந்த நூல்கள் வாயிலாக ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த சிவாசாரியாரவர்கள், அவ்வுண்மைகளை அனைவரும் எளிதிற் கற்றுணர்ந்துய்யுமாறு 'முப்பொருள் விளக்கம்' என்னும் இந்நூலை எழுதி உபகரித்துள்ளார்கள். இதனைச் சைவ சித்தாந்த நூல்களின் சாராத்சாரமெனக் கூறுதல் சாலவும் பொருந்தும். உயர்தர மாணுக்கருக்கு இது பெரிதும் உபயோகப்படும். கல்லூரிகளில் பல்கலைக்கழகப் பிரவேச வகுப்புக்கும், பல்கலைக்கழகத்தில் முதலாமாண்டுப் பரீட்சைக்கும் பகுதி பகுதியாகக் கற்கக்கூடியது. சிறப்பாகப் 'பசு வர்க்கம்' முதல் பின்னரை எச். எஸ். ஸி. போன்றஉயர்தர வகுப்புகளுக்கும், 'பதியுண்மை' முதலிய முன்னரை சர்வகலாசாலை முதல் பரீட்சைக்கும் பாடமாக வைக்கப்படலாம்.

இதன்கண் சிவசக்திபேதங்கள், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், தீட்சையிலக்கணம், அத்துவசுத்தி, உபதேசக்கிரமம், சைவசாதனை, ஞானநிட்டை, சிவோகம்பாவனை, அன்புடைமை (பக்தி), பரமுத்தி நிலை ஆகியவற்றின் விளக்கங்கள் மேற்கோள்களோடு தரப்பட்டிருக்கின்றன.

ஆன்மாவாகிய பசுவைப் பந்தித்த பாசமாகிய மலத்தைச் சிவஞானமாகிய அக்கினியினுலே தகித்தபோது சிவத்துவமாகிய சுத்தநிலை விளங்கும் என்பதற்கறிகுறியாக விபூதி தரிப்பதும், சிவபெருமானது திருக்கண்ணிற்றேன்றும் திருவருட்பேற்றிற்கு அறிகுறியாக உருத்திராக்ஷ தாரணமும் என்றுகொண்டுகுருலிங்கசங்கமாக்கொண்ட திருமேனிகளை வழிபடுதற்குச் சிவசின்னங்கள் இன்றியமையாதன என்பதையும், வேடநெறியில்லார் (தொடர்ச்சி 12ஆம்பக்கம் பார்க்க)




# C. C. C. பண்படுத்தும் புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்

தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.

C. C. C. பசளை கிடைக்குமிடங்கள்:-

சுன்னுகம் — R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் — M. S. மணியம் அன்ட் கோ

ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்


# இலங்கை வானெலி

## தமிழ் ஒலிபரப்பில் புதிய மாற்றங்கள்

இலங்கை வானெலித் தமிழ் நிகழ்ச்சிப்பிரிவில் இம்மாதம் 17ஆம் திகதி தொடக்கம் முன்னேற்றமான வகையிற் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

செய்தி ஒலிபரப்பு, நாடகம் ஆகியவற்றின் நேரம் மற்றியமைக்கப்பட்டிருப்பதுடன், 'மக்கள் சேவை' அறிவுத்திரசு, எமது சிற்பச் செல்வங்கள், இலக்கியச்சுடர், இன்கவி கேளீர், அகப்பட்டுக் கொண்டால், இலங்கையில் கைத்தொழில்கள் என்னும் புதிய நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தவிர, கிராம சஞ்சிகை இசைப்பயிற்சி என்பன தினமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ் விபரங்கள் அனைத்தையும் நிலைய அறிக்கை மூலம் அறிய முடிகின்றது.

இவற்றைத்தவிர, பாமாலை, ஒலிச்சுழல், அங்கும் இங்கும் என்ற பல நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை — 10

# முகம்மது ரூபிப் புலவர்

பண்டிதர் வி. சீ. கந்தையா

பெரும் புலவராகிய சேகுமதாறு சாகிப்பின் அரும்புதல்வர் முகம்மது ரூபி அவர்கள். இவருடைய புலமை பரம்பரைச் சொத்துப்போல் வந்ததொன்று. 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமோ' என்ற பழமொழிக்கிணங்க வந்த ரூபி அவர்கள் இளமையிலேயே 'இவன்தந்தை என் நோற்றான்கொல்' என்னும் சொல்லைத் தந்தைக் கீட்டித் தந்தவர். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' ஆதலால் சாகிப்பினுடைய புதல்வனது புலமையைப்பற்றி வியப்படைதற் கென்ன இருக்கிறதென்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

இயற்கை அழகிலே தன்னை மறந்துநிற்கும் இவர், வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டிருந்தவர். அதனால் வயற்களம் இவரது புலமையினை வளர்த்துச் செய்யுள் அரங்கேற்றத்துக்கும் இடமாகி நின்றது. மட்டக்களப்பில் வழங்கும் நாடோடிக் கவிதைகள் இவருக்கு இளமையில் உயிராய் இருந்தன. தந்தை செய்த பாடல்களையும் பொன்னெனப் போற்றிக் கற்றிருந்த இவரிடம் அரபுமொழியறிவும் வளர்ந்து வரலாயிற்று. மத ஆசாரங்களிலே சிறிதும் வழுவாது நடந்த ரூபி அவர்களுக்குத் தெய்வ அருளும் நன்கு கிடைத்திருந்ததெனலாம். செல்வம், கல்வி ஆகிய இரண்டையும் இந்துக்களைப் போலவே திருமாது, கலைமாது என்று தெய்வமாக மதித்துப் போற்றியவர். வயலின் நல்விளைவு திருமாதின் அருளாலாவதனை அங்கங்குப் பாடியுமிருக்கின்றார்.

இளைஞராயிருக்கும்பொழுதே கவி பாடும் வல்லமையினை இயற்கைச் சூழ்நிலையும் இவர்பால் வளர்க்கத்தக்கதாக அமைந்திருந்தது. செவி கருவியாக அமைந்த இவரது பாடல்களில் இசைபொருந்திய இன்பச் செறிவினை மிகுதியும் காணலாம். மோனை, எதுகை அழகுகள் உடைய செய்யுள்வகைகளை விட, இசைப் பாடல்களே இவரால் அதிகம் பாடப்பெற்றுள்ளன. ஒருமுறை பொத்துவில் என்ற ஊருக்குச் சென்றிருந்த தமது தந்தையாருக்குச் செய்யுள் வடிவிலே கடிதம் ஒன்றனுப்பினாரென்றும் 'தம்மிற் தம்மக்களறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லாம் இனிது' என்று அப்பாடல் புலவராகிய தந்தையை மகிழச் செய்ததென்றும் கூறுவர். பின்வரும் அச்செய்யுளானது கடிதப் பொருளோடு இவரது நிறைந்த தெய்வ பக்தி, தந்தை பக்தி, அரபுமொழி ஞானம், பணிந்த மனப்பான்மை, தமிழ்ப் புலமைச் சிறப்பு என்பவற்றையும் நன்கு காட்டி நிற்பது.

"திருவளரு வானறுசு
  குறுசோடு லௌகு
  பொன்னுலகையும்
திமையில் லாமலே
  சிருட்டித்த இறையாதி
  தினமுனது றகுமத்தெனும்
அருள்வளரு மறுசோடு
  சிரசுடைய நபியினது
  சபாஅத்தினுலும்
அன்பியா அவுலியா
  சுகதாக்கள் சாலிகின்
  அனைவர்துவாப் போற்றி
    னுலும்,
நிருபனே என்னுடைய
  தந்தையை அனுதினமும்
  நீதியிற் சேர்த்தருளுவாய்
நீதியுணராத சிறியேன்
  முகம்மதுரூபிஎன்னுடைய
  துவாச லாம்பின்
அருள்கணக் காயிரத்துத்
  தொள்ளாயிரத்து மூன்று
  சித்திரை மாதமது [ண்டு
பொத்துவிலில் லிருக்கும
  எனது தந்தையர்க்
  கெழுதிய நிருபமே."

"திகிலறவே திருமாது
  உகந்துதனை நோக்குதலின்
  செல்வமுறு பட்டிமேடு
  சேரகக்
  கதிர்பறித்தன அமுதேறித்
  தேவனை வணங்குகின்றதே
மயிலாடு சோலையும்
  குயில்பாடு சோலையும்
  மரைமூகுவனசமதமும்மாரி
  ஓயாதபடி பாய்கின்ற
    சாலிகள்
  வளஞ்செறி கருங்கொடியி
இஃதுறு சூடாக்கரை [லே
  எனும்வட்டை மீதிலே
  இதுமாதம் இருபத்தியாறில்
  இயைபாய் விதைக்கவும்
  ஏற்பாடு பண்ணியே
எத்தனத்தோடிருக்கின்றோம்
சுகிதமுறு நமதுடைய
  வீட்டிலனை பேர்களும்
  சுகமா யிருக்கின்றார்
  துங்கமுறு தாங்களிதை
  ஆங்கறிய எழுதினேன்
  சுதன் முகமது ரூபியே."

[அறுசு—ஆண்டவனது சிங்காதனம்; குறுசு—ஆசனம்; லௌகு—பாவ புண்ணியக் கணக்கெழுதும் பலகை; றகுமத்—அருள்; சபாஅத்—சிபாரிசு; துவா—பிரார்த்தனை; துவாசலாம்—பிரார்த்தனைச் சாந்தி.]

முதற் செய்யுள் அரபுமொழிப்படியான இறைவணக்கமும,

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்பார்க்க)

திருக் குர்ஆன் தெளிவுரை

# இன்பமும் துன்பமும்

அ. க. ரிபாயி, பி. ஏ.

(சென்றவாரத்தொடர்ச்சி)

ஒரு விஷயத்தை அநேகர் மறந்து விடுகிறார்கள். நம் வாழ்க்கையில் எதற்கும் 'பந்தோபஸ்து' 'பாதுகாப்பு' என்று ஒன்றும் இல்லை. இந்தவிதமாகவே வாழ்க்கை நடக்குமென்று உறுதிகூற முடியாது. உலகே சதம் என்று எண்ணி நடந்தாலும் சரியே, பொல்லாத இவ்வுலகு வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு ஒதுங்கினாலும் சரியே, துன்பம் வராது போய் விடவில்லை. இவ்விதம் உறுதி கொடுக்க முடிகிறதா? இது போலத்தான் சுகமும் உத்தரவாதம் கொடுக்க முடியாது.

இது குறித்து திருக் குர் ஆன் என்ன சொல்கிறது?

நாம் பாடு படுகிறோம்; பொருள் சம்பாதிக்கிறோம்; வசதிகள் செய்து கொள்ள திரும்பத் திரும்ப எத்தனிக்கிறோம்; நமது உழைப்பால் கிடைக்கும் பலன் நாமே நுகர வேண்டுமென்பதுபோல் இருக்கிறது. இது இயற்கையாகவே வருகிறது. ஆனால் அத்துடன் கூடமற்றொன்றும் நாம் நினைக்க வேண்டும். பிறருக்கு நமது உழைப்பின் பலனில் பங்கு கொடுக்க வேண்டும் என்ற பரந்த நோக்கு உண்டாகவேண்டும். நமக்கு மட்டுமல்ல நாம் சம்பாதிப்பது, பிறருக்கும் கொடுத்து உதவுவதற்கே. நம்மிடம் அடைமானமாகஒப்படைக்கப்பட்டிருப்பதாக நமது செல்வங்களைக் கருதவேண்டும். அவற்றை மேற்பார்க்கும் தர்மகர்த்தாக்கள், என்றே எண்ணிச் செயலாற்ற வேண்டும். மனிதப் பண்புக்கு இது ஒத்ததே. தர்ம சிந்தனை இயற்கையானதே, இவ்விரண்டையும் ஆதாரமாக வைத்தே காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

நாம் எது செய்தாலும் நமது சந்தோஷத்திற்காகத் தானே செய்கிறோம்? மனதிற்கு உற்சாகம் கிடைக்காவிட்டால் வேலையில் ஈடுபடத் தயங்குகின்றோம். மனநிறைவு அளிக்கும் பழக்கமாக பகிர்ந்தளிப்பதையும் ஆக்கிக்கொள்ள வேண்டும். பிறருக்கு அளிப்பதை மனமுவந்து அளிக்கப் பழகவேண்டும் நம்மிடையே ஊறிப்போன பழக்கமாக இது ஆகிவிட வேண்டும். பகிர்ந்து கொடுப்பது சந்தோஷத்தைத் தருகிறது ஆத்மாவுக்கு சாந்தியை அளிக்கிறது என்று ஏற்பட்டுவிட வேண்டும. இது ஒன்றும் அவ்வளவு கஷ்டமானதல்ல, கொஞ்சம் உட்டி யோசித்துப் பார்த்தால் எவ்வளவு இலேசானதென்பது விளங்கும்.

ஒரு காரியத்தைத் துவக்குறோம. எதிர்பாராமல் நஷ்டம் வந்து விடுகிறது. பொருள் பறிக்கப் பட்டுப்போய் விடுகிறது, அப்பொழுது என்ன செய்வது? நம்மிடமிருந்து பறிக்கப்படுவதை விட நாமே மனமுவந்து கொடுத்துவிடுவது மேலல்லவா? இதில் ஒருவித இன்ப உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா? பொருள் போன பின்பும் சந்தோஷமாக இருக்க முடிகிறது அல்லவா? பொருள் பறிக்கப்படும் பொழுது என்ன உணர்ச்சி எழுகிறது. நாமே வலியக் கொடுக்கும்போது என்ன உணர்ச்சி எழுகிறது? எது நல்லது, எளிது, சிலாக்கியமானது?

உலகங்கள் அனைத்தையும் ஆக்கிக் காப்பவனான—ரப்பில் ஆலமீனான — அல்லாஹ்வுக்கு அவனது குணாதிசயங்களைத்துதிக்கும் திருநாமங்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் ஒரு செயலைக் குறிக்கிறது. அத்திருநாமங்கள் குறிப்பிடும் செயலை நாமும் செய்து பழகவேண்டும், அப்பொழுது ஆண்டவனுடைய வேலையைச் செய்தவர்களாகிறோம். சிருஷ்டிகளிடம், அன்பாக தாராளமாக, மன்னிப்பவனாக, உதவிசெய்பவனாக, வழிகாட்டுபவனாக ஆண்டவன் இருக்கிறான். நாமும் இவற்றையே கடமையாக்கிக் கொள்ளவேண்டும். உலக ரட்சகனுக்கு நம்மை அர்ப்பணிப்பதென்றால் இது தான்.

"சந்தேகமில்லாமல் கஷ்டத்துடன்தான் சுகம் இருக்கிறது. கஷ்டத்தில்தான் சுகம இருக்கிறது ஆகவே, நீங்கள் சுதந்திரமாய் இருக்கும் பொழுது நன்றாக உழையுங்கள். உங்களுடைய ஒரே குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுங்கள்" என்பது திருமறையின் கட்டளை,

ஆண்டவனின் நல்லடியாராகிக் கொள்ளுங்கள்! அப்படி என்றால் எப்படி? ஆண்டவன் செய்வதே போல், அவனது சிருஷ்டிப் பொருள்களின் நன்மைக்காக, சந்துஷ்டிக்காக நமது பொருளை, பலத்தை, அறிவைச் செலவிட வேண்டுமென்பதுதான். பிறருக்கு உதவுவதற்காகவாவது உழைக்கவேண்டும்; கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டும்; பொருளீட்ட வேண்டும். பொருள் இல்லாதவன் எவ்வி

(தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்துப் பேனாமன்னர்கள்-35

## சு. வே.

"காலை — 'குளுகுளு' என்று சீதம் ததும்பும் காலை. அந்தக் காலையின் சௌந்தர்ய சிகரம்தான் அதோ விளங்கும் தாமரைத் தடாகம். ஆழ்ந்த தபஸ்வியின் ஞானவிளக்கம் போல் தெளிந்திருந்தது அதன் ஜலம்,

அதில் ஒரு மலர்; தாமரை மலர். மொக்கவிழும் போது.........ஆதவன் வருகிறான்......அவன் கதிர்க்கரங்களின் அணைப்பிலே அந்தப்போது மலராக விரிகிறது; தந்தையின் அணைப்பிலே மகனறிவு விரிவதுபோல. அந்த மலருக்கு அவன், தந்தை. பொலிவுதரும் தந்தை...... நீர் அதன் தாய்— உயிர் மூச்சளிக்கும் தாய்...... தண்ணீர் சலசலக்கிறது. ஒரு சிறுவன் நீந்திச் செல்கிறான். ......அடுத்த கணம்...... பூ கொய்யப்பட்டது......கரையிலே கிடக்கிறது...... வாய்விட்டுச் சொல்கிறது.... "ஆம் இனி என் வாழ்நாள் முடிந்துவிட்டது. எனக்குத் தந்தையான சூரியனே என்னைத் தகிப்பான். எனக்குத் தாயான தண்ணீரே என் உடலை — தண்டை அழுகச் செய்வாள். அவரவர் நிலைகெட்டு விட்டதால் தாழ்வடைவதுடன் பல இன்னல்களையும் அனுபவிக்க நேரிடும். இது இயற்கையின் நியதி. இதற்கு நானே சாட்சி'. நிலைகேடு என்ற இந்த உருவகக் கதையையும் வேறு பல உருவகக் கதைகளையும் எழுதி, உருவகக்கதை என்ற உடனே சு. வே யா? என்று ஆவலைத் தூண்டியவர்தான் சு. வே என்ற இரு எழுத்துக்களால் புகழீட்டி வரும் சு. வேலுப்பிள்ளையாவர்.

கிராம ஊழியன் என்ற தமிழ்நாட்டுப் பிரபல பத்திரிகையின் அரவணைப்பிலே முளைகொண்ட இந்த எழுத்தாளர் ஈழகேசரியின் வளர்ப்புக் குழந்தை; மறுமலர்ச்சியின் அன்பர். சுதந்திரன், தினகரன் இவற்றிலும் எழுதியுள்ளார். கடலலை, பரோபகாரம் (கிராம ஊழியன், நிலைகேடு; மேகத்தின் காதல், பரோபகாரம் (மறுமலர்ச்சி) ஆணவம், விடிவெள்ளி, சங்கமம் உலகம் (ஈழகேசரி) என்பன அவர் எழுதிய உருவகக்கதைகள். அவருடைய இந்த உருவகக்கதைகள், அருமையான தத்துவங்களை மிக இலேசாக விளக்கும் கண்ணாடிகள். வாசிக்க வாசிக்க அலுப்புத் தட்டாதவை. சிந்தனையாளருக்கு நல்விருந்தாயமைந்தவை. அவற்றுள்ளும் விடிவெள்ளி, சங்கமம் என்பன மிகமிக உயர்வாக இருக்கின்றன என்பது என்னுடைய முடிபு.

உருவகக்கதைமாத்திரம் அன்றி நல்ல சிறுகதைகளையும் அவர் எழுதியுள்ளார். கிடைக்காத பலன், புத்தனின் சுவடு, பாற்காவடி, காலத்தின் தண்டனை, மனிதமிருகம், மனநிழல், சிற்றன்னை, அன்புக்கறை, மயானம், அவளும் ஒருதாய், தோழன், விதைப்பும் அறுப்பும், பாசம், பிரேமை என்ற பதினைந்தும் அவர் எழுதியவற்றில் சிறந்து விளங்குகின்றன. இந்தப் பதினைந்து கதைகளுள்ளும் பாற்காவடி, புத்தனின் சுவடு மனிதமிருகம் என்ற மூன்றும் மூன்று கண்களாகத் திகழ்கின்றன. பாற்காவடி ஈழத்துச் சிறுகதைகளிலே சேரக்கூடியதென்பதில் ஐயமொன்றில்லை.

மங்கையர் திலகம் என்ற படம் இப்போது ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் ஏராளமான பணத்தை வாரிக் கொடுத்துச் 'சக்கைப்' போடு போட்டுக்கொண்டிருக்கின்றதல்லவா? ஒரு குழந்தையின் உயிருக்காகத் தன் உயிரையே அர்ப்பணித்த ஒரு வளர்ப்புத் தாயின் சோகக் கதை அது. டக்டரால் கைவிடப்பட்ட குழந்தையைத் தெய்வம் காப்பாற்றுமா? என்று அதிகம் படித்தவர்கள் கூச்சலிட்டும், பொதுசனங்கள் மனத்திருப்தியோடுதான் அதைப் பார்க்கின்றனர். அந்தக் கதையின் 'கரு'தான் பாற்காவடி என்ற சு. வே. அவர்களின் கதையின் கருவுமாகும். தென்னந்தோட்ட வேலைக்காரனான வீரனின் உயிரைக் காப்பாற்ற மனித முயற்சியெல்லாம் செய்த பின் தெய்வத் துணையை நம்பி அதில் வெற்றிபெற்ற வள்ளி திருக்கார்த்திகைத் தினத்திலே சாதாரணமாகப் பாற்காவடி எடுக்கிறாள். எதிரே படாடோபமாகப் பணக்காரர்களின் மேளதாளச் சப்தத்தோடு பல செடிற்காவடிகள் போட்டி போடுகின்றன. "கொட்டு மேளத்தின் ஓசையிலே, மனித கும்பலின் மத்தியிலே, பணத்தின் இறுமாப்பிலே, பகட்டின் பிரதிபலிப்பிலே ஹிம்சையின் பதிவிலே, செல்லும் காவடிகள்—செடிற்காவடிகள் ஒரு கூப்பிடு தூரத்துக்கு முன்னாற் சென்றுவிட்டன. பக்திக் கனலிலே, அன்பின் பெருக்கிலே எடுக்கப்பட்ட பாற்காவடி ஒன்று அதன்பின்னால மெல்ல மெல்லச் சென்றது. அதனோடு ஓர் ஆணுருவம எலும்புந் தோலுமாகப் பின்தொடர்ந்தது" என்று முடியும் போது ஓர் அருமையான உருவம் பெற்று சிறுகதையாக அது அமைந்துவிட்டது என்று நாம் புளகாங்கிதமடைகிறோம்.

அவருடைய அடுத்த நல்லகதையான புத்தனின் சுவடு ஈழநாட்டுச் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டது. கொல்லாமையையே விரதமாகக் கொண்ட சங்கபோதியையும் கோட்டாபயனையும் வைத்துப் பின்னப்பட்டது. ஈழத்துக் குமணன் என்று போற்றப்படும் சங்க போதியின் கதை எல்லோர்க்கும் தெரிந்ததுதான். ஆனால் சு. வே. அதற்கிட்டிருக்கும் 'மெருகா'ல அக்கதையின் புனிதத்தன்மை இன்னும் ஒருபடி கூடுகின்றதேயன்றிக் குறையவில்லை. சங்கபோதியின் தலைக்காகப் பறைபறைவித்த கோட்டாபயனின் முன்னிலையில் ஒரு குடியானவன் அரசனின் தலையைக் கொண்டு வந்து வைத்தபோது அவன் உள்ளுணர்வு அவனையே வாட்டுகிறது. "புத்தனின் ஞானோபதேசங் காட்டிய வழி நடந்த அரசன் இந்த இராச்சியத்துக்கே ஒரு செழுஞ்சோதியல்லவா? துரோகி! நீ அதை ஊதி

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)

## வாரச் செய்தி

கொழும்புத்திட்ட உதவியின்படி இலங்கையில் அணுசக்தி உற்பத்தி இயந்திரம் ஒன்று நிறுவப்படுமெனத் தெரிகிறது. சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் கொழும்புத்திட்ட மகாநாட்டில் இது ஆராயப்படும்.

**திறக்க முடியாது!**

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர், யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு (விஸா) வழங்கும் காரியாலயம் ஒன்றினைத் திறப்பதெனத் தீர்மானித்திருந்தார். இலங்கை அரசாங்கம் இதற்கு இணங்க முடியாதென முதலமைச்சர் சேர் ஜோன் தெரிவித்துள்ளார்.

**ரூபாய் 1000 பிணை**

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'பஸ்' கலகத்தால் ஏற்பட்ட வழக்கிற் சம்பந்தப்பட்டவர்களைத் தலைக்கு 1000 ரூபாய் பிணை கட்டுமாறு நீதிபதி தெரிவித்துள்ளார்.

**மண்டூரில் அரிசி ஆலை**

கல்லோயாத் திட்டத்தின்படி அங்கு குடியேறியுள்ள விவசாயிகளின் நலனுக்காக, மண்டூர்ப் பகுதியிற் பிரமாண்டமானதோர் அரிசி ஆலை 5 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு வருகின்றது.

**மல்கம் மக்டானல்ட்**

இந்தியாவில் பிரிட்டனின் தூதுவராகப் பதவி வகிக்கும் மல்கம் மக்டனல்ட் அவர்கள் சிங்கப்பூரிலிருந்து இந்தியா திரும்பும் வழியிற் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார். அடுத்த நாள் இந்தியாவுக்குப் பிரயாணமானார்.

**அமைச்சர் திரும்பினார்**

சீனத்துக்கு வர்த்தக சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற அமைச்சர் ஷேர்லி கொரியா தமது கோஷ்டியினருடன் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார்.

**கல்வி விசாரணை**

கொழும்பு நகரின் வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஆங்காங்குள்ள கல்வி வசதிகளையும் ஓய்வுநேர உபயோகத்தையும்பற்றிய விசாரணை ஒன்றை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பகுதி விரைவில் நடாத்தவிருக்கின்றது.

**பறக்குந் தட்டா?**

திருகோணமலையிற் சென்ற 7-10-55 வெள்ளிக்கிழமை யிரவு 10-45 அளவில் ஆகாயத்தில் ஓர் ஒளி வட்டமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றதென்றும். இன்னொரு ஒளிவட்டம் அதே திசையாகச் சென்றதெனவும் தெரிகிறது, மறுநாள் சனிக்கிழமை இரவு ஓர் ஒளி வட்டம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து பின் மேற்கு நோக்கிச் சென்றதாம். இது ஒருவேளை பறக்கும் தட்டாகவிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

**தொழிலாளர் புகார்**

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கொடுக்காத காரணத்தால் வேலையினின்றும் நீக்குவதற்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் துறைமுகத்தில் வேலை செய்யும் முஸ்லீம் சிப்பந்திகளில் அநேகர் தொழில் அமைச்சர் டாக்டர் எம். ஸி. எம். கலீலுக்குப் புகார் செய்துள்ளார்கள்.

**குழந்தைபோற் பயிர்**

தமது குழந்தைகளைப்போற் பயிர்களை விவசாயிகள் கவனிக்க வேண்டுமென இலங்கையிலுள்ள யப்பானியத் தூதுவர் கிருயுகி வெள்ளவை பெரிகோங் தோட்டத்தில் நடைபெற்ற நாற்றுநடுகை விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

**வாலைப் பிடித்தார்!**

நாகபுரி சோனேகரன் விமான நிலையத்தில் 28 வயதுள்ள ஒருவர் விமானத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு பம்பாய்க்குச் செல்ல முயற்சி செய்தார். ஆனால் தரையில் விழுந்து படுகாயமடைந்து வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டுள்ளார்.

# வாழ்வில் ஒளி

### சிறுகதை

### மணி

— 2 —

"நான் கொழும்புத் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டேன் கொழும்புக்குப் புறப்படும்பொழுது "அண்ணா நீங்கள் அங்கு போய்ச்சேர்ந்ததும் கடிதம் எழுத வேண்டும்" என அன்புக் கட்டளையிட்டாள் பார்வதி.

"பார்வதி; எனக்கு இதெல்லாம் சொல்லியாதரவேண்டும். அம்மாவையும் அழகனையும் கவனமாய்ப் பார்த்துக்கொள். நான் விடுமுறைக்கு உங்கள் எல்லோரையும் பார்க்க வருவேன்."

"ஆம்; அன்று அன்பு மொழி கூறி அனுப்பிய பார்வதிதான் இன்று சாகக் கிடக்கின்றாள். "ஏழைக்குச் சாவிற்தான் ஓய்வு" என்று எவனோ ஒரு அறிஞன் கூறிய மொழி என் மூளையில் பளிச்சிட்டது. ஆமாம் பார்வதி ஒரு புது உலகத்திற்குப் போகப்போகின்றாள். அங்கு வறுமை துக்கம் மகிழ்ச்சி ஒன்றும் அவளைப் பாதிக்காது. 'எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற அடிப்படைத் தத்துவத்தை இப்புது உலகத்திலே தான் காணமுடியும். ஆனால் இங்கு .......? கண்கள் இருண்டன கையில் பிடித்திருந்த கடிதம் நனைந்தது. அன்று மாலை புகைவண்டியில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுவிட்டேன்.

வீடு சேர்ந்ததும் பார்வதி என்று அலறிக்கொண்டு ஓடினேன். கட்டிலிற் பார்வதி துவண்டு கிடந்தாள். அழகன் ஓயாது அழுதுகொண்டே நின்றான். "பார்வதி...... உனக்கு என்ன செய்கின்றது. டாக்டர் என்ன சொன்னார்......" என் குரல் அடைத்தது.

பார்வதி மெதுவாகக் கண் விழித்தாள் "அண்ணா! உங்களைத் தரிசிப்பதற்காகவே என் உயிர் இவ்வளவு நேரமும் ஊசலாடிக்கொண்டிருந்தது. அம்மாவும் நீங்களும் என்மீது காட்டிய அன்பையும், ஆதரவையும் விபரிக்கவே முடியாது. உங்களைப் போன்ற சிலர் இவ்வுலகில் இருப்பதால்தான் ஏழைகளின் இருண்ட வாழ்வில் சிறிது ஒளியாவது தென்படுகிறது." மூச்சுத் திணறியது பார்வதிக்கு. அழகனை அணைத்து முத்தமிட்டாள். "அண்ணா அழகன் இனிமேல் உங்கள் பொறுப்பு." அழகனை அணைத்திருந்த கை சோர்ந்து விழுந்தது. பார்வதியின் உயிர்ப் பறவைக் கூண்டை விட்டுப் பிரிந்தது.

* * *

பார்வதியின் பிரிவு வேதனையில் வேணியைக் காண எனக்கு நேரமே இல்லை. அன்று மாலை சூரியன் மேற்குக் கடலில் தன் ஜாலவித்தைகளைச் செய்துகொண்டிருந்தான். அவன் முகம், நாணத்தால் சிவக்கும் என் வேணியின் முகத்தை நினைவூட்டியது. வேணியைக் காணக் கடற்கரையை நோக்கிச் விரைந்தேன். நானும் அவளும் ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டிருக்கும் பூவரச மாத்தின் கீழ் இருந்தாள் வேணி. "வேணி நான் ஒரு அவசர காரியமாய் ஊருக்குப் போவேண்டியிருந்தது. ஆதலால் அன்று உனக்குச் சொல்லக்கூட நேரமில்லாது போய்விட்டது. என்னை மன்னித்துவிடு வேணி." அவள் கையைப் பற்றினேன்.

வெடுக்கெனக் கையை விடுவித்துக்கொண்டாள்.

"ஆண்களே இப்படித்தான்; ஒரே ஏமாற்றுக்காரர்கள். இவ்வளவும் தெரிந்த பின்பும் நான் என்ன மூளையில்லாதவளா உங்களை நம்புவதற்கு. அவசரமாய் ஊருக்குப் போனாராம்! அப்பப்பா! எவ்வளவு பொய். எனக்குத் தெரியாதாக்கும் ஏன் ஊருக்குப் போனார் என்று. உங்களுக்கும் உங்கள் வர்க்கத்திற்கும் ஒரு கும்பிடு. நான் வருகின்றேன்." பொரிந்துதள்ளிவிட்டு எழுந்தாள் வேணி.

என் தலையில் சம்மட்டியால் மோதுவது போன்று இருந்தது. "என்ன இது வேணி. எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! ஏன் இப்படி என்னைப் போட்டு வதைக்கின்றாய். உன்னைக்காண எவ்வளவு ஆவலாய் ஓடிவந்தேன் தெரியுமா!"

"நான் உங்களை ஒன்றும் வதைக்கவில்லை. பார்வதியைக் கேளுங்கள். அவள்தான் உங்கள் உள்ளத்தில் வியாபித்திருக்கின்றாள்." வேணி இவற்றைக் கூறியதும் அங்கு நிற்கவில்லை. ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டாள்.

என் தலை சுற்றியது. ஐயோ! வேணி என்னைத் தவறாக எண்ணிவிட்டாயே! நானும் நீயும் எவ்வளவு இன்பக் கனவுகள் கண்டோம். ஒரே நொடியில் சிதைத்துவிட்டாயே! 'நீங்கள் இல்லாமல் எனக்கு வாழ்வில்லை' என்று சொன்னாயே! அப்படிப்பட்ட வேணியா இன்று இப்படிப் பேசினாய். உன் முதல் சந்திப்பு - அன்று நீ பூத்த புன்னகை – இன்றும் என் கண்முன் நிற்கிறது.

மூளை சூடேறியது. தள்ளாடிக்கொண்டு வீடு சேர்ந்தேன்.

இச்சம்பவத்திற்குப் பின் வேணி என்னைத் திரும்பியும் பார்ப்பதில்லை. நான் என் வீட்டு வாசலில் அவளுக்காகக் காத்து நிற்பேன். ஆனால் அவள் குனிந்த தலை நிமிராமலே செல்வாள்.

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் உருண்டோடின. எங்கள் வாழ்வில் எவ்வித மாற்றமும் நேரவில்லை. வேணியை நான் மறக்க வேண்டியதுதானா...? என் அன்பு மொட்டு சந்தேகம் என்னும் தீயினால் எரிக்கப்பட்டு கருகிச் சாம்பலாவதா? அந்த மொட்டு மலர்ந்து நறுமணம் வீசும் அழகை என்று காண்பேனோ!

அன்று என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அது வேணியின் கையெழுத்துத்தான். அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தேன்:–

என் இன்ப ஊற்றே;

"நான் ஒரு பெண்ணல்ல.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)


வித்தியா பிரசுர சபையினரால்
அங்கீகரிக்கப்பட்ட

**கணித புத்தகங்கள்**

ஆறும் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்பு வரையும் தொடர்ந்து கற்கக்கூடிய முறையில் இலகுவான தமிழ் நடையில்

பரமேஸ்வர (தமிழ்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கணிதப் பேராசிரியராய் இருந்தவரும் பரமேஸ்வரக் கல்லூரிக் கணித விஞ்ஞானப் பகுதிப் பிரதம ஆசிரியராயிருப்பவருமாகிய

திரு. ச. சிதம்பரப்பிள்ளை B. A., B. Sc. (Lond) அவர்களால் எழுதப்பட்டவை.


| | |
|---|---|
| 1. எண் கணிதம் | 2-75 |
| 2. கேத்திர கணிதம் | |
| 1ஆம் புத்தகம் | 3-00 |
| 2ஆம் ,, | 2-50 |
| 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-00 |
| 3. அக்ஷர கணிதம் | |
| 1ஆம் புத்தகம் | 3-00 |
| 2ஆம் ,, | 3-00 |
| 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-50 |

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்
திரு. கு. நவரத்தினம் F. C. I. (Eng.)
அவர்கள் எழுதிய

| | |
|---|---|
| 4. கணக்குப் பதிவு நூல் | 3-50 |

எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனைக்கிருக்கின்றன.

விற்பனை உரிமையாளர்:
தனலக்ஷுமி புத்தகசாலை, சுன்னாகம்

## ஊர் வதந்தி

**கொண்டோடி**

- அரசாங்க மொழிச் சிக்கல் பற்றி இப்போது அடிக்கடி கூட்டங்கள் நடக்கின்றனவாம்.
- கூட்டங்களில் ஆரவாரங்களுக்கும் அடிதடிச் சம்பவங்களுக்கும் குறைவில்லையாம்.
- ஆரவாரத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் உண்டாக்குவதில் மஞ்சள் அங்கிதரித்தவர்கள் மகா கெட்டிக்காரர்களாம்.
- அங்கிக்குள்ளே புகுந்திருப்பவர்கள் யாரென்பதைப் பொதுமக்கள் அடையாளம் கண்டுபிடித்து விட்டார்களாம்.
- சாதுவேடமிட்ட அந்தச் சட்டை மாறிகள் சண்டியர் கும்பலின் முன்னாள் உறுப்பினர்களாம்.
- மூர்க்கிங்கள முன்னணியுறுப்பினர்களும் முரட்டுத்தனம் மிக்கவர்கள்தானும்.
- முரட்டுச் சுபாவத்தை மூடி மறைக்க அவர்கள் இப்போது மொட்டையடித்து முற்றத்துறந்தோர் வேடம் தாங்குகிறார்களாம்.
- வேடதாரிகளை மேடையேற்றுவதில் இலங்கையமைச்சர்கள் சிலர் வின்னுதிவிண்ணர்களாம்.
- கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்குமென்பது அந்த அமைச்சர்களின் அசைக்கமுடியாத கொள்கையாம்.
- கலகத்தை யடக்கப் புறப்பட்ட பொலிஸ்காரர்கள் தம் கடமையை மறந்து ஒருவரையொருவர் வாயில்வந்தபடி வைதார்களாம்.
- இந்தப் பொலிஸ் சண்டையைச் சமாதானஞ்செய்தவர்கள் யாழ்ப்பாண பல்கிலையக் குழப்பத்தின்போது வேடிக்கைபார்க்கக் கூடிநின்றவர்களாம்.
- சண்டைக்காரர்கள் தலையாரியைக் கண்டதும் தகரக்கடைக்குள் நுழைந்தார்களாம்.
- பதவியாசை பிடித்தவர்கள் மாலைகளைத் தூக்கிக்கொண்டு மானவெட்கமின்றி ஓடுவார்களாம்.
- யாழ்ப்பாணத்துக்குச் சமீபத்தில் வரவிருந்த தேசாதிபதிக்கு மாலை சூட்டவேண்டுமென்று பலர் ஆவலோடுகாத்திருந்தார்களாம்.
- அவர் வருகை திடீரென்று தடைப்பட்டதால் அந்த ஆவலில் மண்விழுந்துவிட்டதாம்.
- சேர் ஒலிவர் உத்தியோக பூர்வமாக வடக்கே தலைநீட்டத் தயங்கியதேன் என்பது சகலருக்கும் தெரியுமாம்.
- கொழும்பிலே கிளம்பிய குழப்பத்தால் உண்டான கூச்சந்தான் அத் தயக்கத்துக்குக் காரணமாம்.
- தமிழ் பேசும் மக்கள் முன்னணியும் தயங்கித் தயங்கி உருவாகிறதாம்.
- முன்னணியைக் கூட்டி முடிசூடவிருப்பவர்கள் எல்லோரும் சென்ற வாரம் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டார்களாம்.
- இதனைக் கண்டு வெளியிட ஆவல்கொண்டு அங்கு நுழைந்த நிருபரொருவர் அவமானத்துடன் வெளியேற்றப்பட்டாராம்.
- ஆந்திர நாட்டு நகரசபை அபேட்சகர் ஒருவரும் சமீபத்தில் அற்புதமான வாக்குறுதியொன்றைச் சொன்னாராம்.
- தான் வெற்றிபெற்றதும் நான்கு கருவாட்டுக் கடைகளை நகரில் அமைப்பேனென்பதே அந்த அபாரமான வாக்குறுதியாம்.
- ஆனால் கொழும்பு நகரசபை அபேட்சகர்கள் சிலரின் வாக்குறுதிகள் கள்ளுக்கடைகளுடன் மட்டும் நின்றுவிட்டனவாம்.

யாழ்ப்பாணம்

தமிழ்ப் பேசும் மக்கள் முன்னணியை அமைப்பது சம்பந்தமான முயற்சிகள் இப்போது உச்சமான கட்டத்தை யடைந்துள்ளன. யாழ்ப்பாணத்திற் சென்ற 15-10-55 சனிக்கிழமை நடந்த தமிழ்க் காங்கிரசுப் பொதுக்குழுக் கூட்டத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடந்த தமிழரசுக் கட்சிக்குழுக் கூட்டத்திலும் முக்கியமாக இந்த முன்னணி பற்றிய பேச்சுவார்த்தைகளே நடைபெற்றனவாம். ஆயினும் அவ் விவகாரம் குறித்து இரு கட்சியினரும் எதையும் பத்திரிகைகளுக்கு வெளியிடாமல் மிக இரகசியமாக வைத்துள்ளனர்.

முன்னணியை உருவாக்குவதில் அதிக அக்கறை கொண்டு உழைத்துவருபவரான திரு. சி. சுந்தரலிங்கம் எம். பி. இவ்விரு கூட்டங்களுக்கும் சமுகமளித்துக் கட்சி உறுப்பினர்களுக்கு நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறினாராம். தமிழரசுக்கட்சிக் கூட்டத்திற் பல மணி நேரம் தொடர்ந்து நடந்த விவாதத்தில் திரு. சுந்தரலிங்கம் தமிழ்க் காங்கிரசினதும், ஏனைய பெரியார்களினதும் கருத்துக்களை எடுத்துரைத்தாரென்றும் பெரும்பாலும் இரு கட்சிகளுக்கிடையிலும் இதுசம்பந்தமான ஐக்கியம் வளர்வதற்கான அறிகுறிகள் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

ஆயினும் குறிப்பிட்ட சில மூலாதாரமான சிக்கல்கள் பற்றித் தமிழரசுக்கட்சி இன்னும் எவ்வித முடிவுக்கும் வரவில்லையென்றும் அவைபற்றி ஆராய மீண்டும் இம்மாதம் 30 ஆம் திகதி பொதுக்குழு யாழ்ப்பாணத்திற் கூடுமெனவும் அறியப்படுகிறது. அன்றையதினம் திரு. சுந்தரலிங்கம் சமுகமளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.

> சில முக்கிய சிக்கல்கள் தீர்க்கப்படும்வரை தமிழ்ப் பேசும் மக்களின் முன்னணி பூரணமாக உருவாகுமென்று கருதப்படவில்லை.

# முன்னணி உருவாகுமா?
# மூலாதாரமான சிக்கல்கள்
## கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடு

**நமது அரசியல் நிருபர்**

இந்த முக்கிய சிக்கல்களைப் பற்றித் தமிழரசுக்கட்சி செய்யும் முடிவு முன்னணியிற் சேர்வதா, இல்லையா என்பதை வரையறுத்து விடுமென அக்கட்சி வட்டாரங்களிற் கருதப்படுகிறது. முன்னணியின் கொடி எதிர்வரும்பொதுத் தேர்தலுக்கு நியமிக்கப்படும். அபேட்சகர்கள், விபரம் என்பனவே இந்த முக்கிய சிக்கலுக்குக் காரணங்களா யிருந்துவருகின்றன. அவையிரண்டையும் பொறுத்தவரை தமிழ்க்காங்கிரசுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் அபிப்பிராய பேதம் நிலவுகிறதாம். இவற்றுக்கெல்லாம் மேலாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தனிப்பட்ட சில செயல்கள் முன்னணிபற்றிய பேச்சுவார்த்தைகள் முறிவதற்குக்காரணமாக அமையக்கூடும் எனவும் ஒருசாரார் அஞ்சுகின்றனர்.

திரு. பொன்னம்பலம் சமீபத்திற் கிழக்கு மாகாணத்திலுள்ள சில பெரியார்களுடன் குறித்த முன்னணி பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தினாராம். அதில் அவருடைய தனிப்பட்ட செல்வாக்குச் செறிந்திருந்ததெனவும், அதனால் முன்னணியின் அடிப்படையான நோக்கம் கூட மாறுபட்டுவிடலாமெனக் கருதுவதுமே இந்த அச்சத்துக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

திரு. பொன்னம்பலம் தனிப்பட்டமுறையில் இவ் விவகாரங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதும் பிரமுகர்களை இரகசியமாகத் தனித்தனி கண்டு பேசுவதும் ஏன் என்பது அனுபவம் மிக்க சில பெரியார்கள் அறிந்ததொன்று.

சமீபத்தில் ஒருநாள் தமிழரசு வாலிபமுன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துக்கும் அவர் தனிப்பட்ட முறையில் அழைப்பனுப்பியிருந்தாராம். ஏதாவது பேசவேண்டுமானல் கட்சி மூலமாகப் பேசிக்கொள்ளலாமேதவிரத் தனியாகப் பேசத் தான் தயாரில்லையென்று திரு. அமிர்தலிங்கம் மறுத்துவிட்டாரெனவும் ஒரு வதந்தி உலவுகிறது.

முன்னணிக்கு ஒரு கொடி தேவையா என்ற கேள்வி பெரும் அபிப்பிராய பேதத்தை வளர்த்திருக்கிறது. கொடியே தேவையில்லையென்று சொல்பவர்களைப் பற்றி மற்றொரு சாரார் சந்தேகப்படுகின்றனர்.

திரு. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு ஒரு அபேட்சகராக அடுத்த தேர்தலிற்போட்டியிட விருக்கிறாரென்பது ஏற்கெனவே வெளியான ஒரு செய்தியாகும். முன்னணி அபேட்சகராக அவர் சாவகச்சேரித் தொகுதியிற் போட்டியிட வேண்டுமென்று திரு. பொன்னம்பலமும் அவரது சகாக்களும் வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது இதைத் தமிழரசுக்கட்சி ஒருபோதும் விரும்பமாட்டாதென அக் கட்சியோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் பேசிக்கொள்கின்றனர். சாவகச்சேரியிற் போட்டியிட வேண்டுமென திரு. அமிர்தலிங்கத்தை விரும்பியழைப்பதற்கு மர்மமான காரணங்கள் இரண்டு இருக்கலாம். ஒன்று வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த ஒருவர் அபேட்சகராக முன்வர விருப்பது. இரண்டாவது காரணம் இப்போது இங்கு அவசியமில்லை.

திருகோணமலையின் எம். பியும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. என். ஆர். இராசவரோதயம் அவர்களை அடுத்த தேர்தலில் அபேட்சகராக நியமிக்க முன்னணியின் பங்காளர் சிலர் விரும்பவில்லையாம். அதற்குக் காரணம் திரு. இராசவரோதயத்துக்கு அங்கு ஆதரவு உண்டா இல்லையா என்ற சிக்கலல்ல. தங்கள் அபிமானி ஒருவருக்கு எப்படியும் இடமளிக்க வேண்டுமென்று அப் பங்காளர் விரும்புவதேயாகும்.

இந்த முன்னணி உருவாவதற்கு மற்றொரு தடை இலங்கையின் அரசாங்க மொழிச் சிக்கலாகும். தமிழும் சிங்களமும் மட்டுமன்றி ஆங்கிலமும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஆட்சி மொழியாக—அதுவும் முதன்மைத் தானத்தில் இருக்கவேண்டுமென—ஒரு சாரார் வற்புறுத்துவதாக அறியப்படுகிறது.

சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில் ஆங்கிலத்தின் அவசியமென்ன என்ற கேள்விக்குத் தற்போதைய சுய மொழிப் போரையும் அதனுல் தமிழருக்குண்டாகும் தாக்கத்தையும் அது சமாளித்து விடுமெனச் சுட்டிக் காட்டப்படுகிறதாம்.

இவ்வித சில முக்கிய சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை தமிழ்ப் பேசும் மக்களின் முன்னணி பூரணமாக உருவாகுமென்று கருதப்படவில்லை. ஒரு சமயம் அதுபற்றிய பேச்சு வார்த்தைகளைத் தமிழரசுக் கட்சி திடீரெனத் துண்டித்து விடவுங் கூடும். இந்த முன்னணி பற்றித் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே கருத்து மாறுபாடு நிலவுகிறதென்பது வெளிப்படை. அவ்வித மாறுபாடு தோன்றுவதற்குக் காரணம் கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்குப் பங்கம் ஏற்படக் கூடாதென்று கருதப்படுவதேயாகும்.

இன்றைய நிலைமையை வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து ஏற்கெனவே எதிர்பார்த்த அளவுக்கு இந்த முன்னணி பலமுடையதாக உருவாகுமென்று கருதப்படவில்லை. அந்த நம்பிக்கையை அதிகமானேர் கைநழுவ விட்டுள்ளனர்.

இவற்றுக்கிடையே தேர்தல் அபேட்சகர் நியமனம் சம்பந்தமான பேரம் முன்னணியை உடைத்தெறியக் கூடிய ஒரு சூழ் நிலையையும் சிருட்டித்து விடவுங் கூடும்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

# இயந்திரமும் சமுதாயமும்

**எஸ். கே. கந்தையா**

**பிரான்ஸ்:**

பிரான்ஸின், ஜேர்மனியின், இத்தாலியின், ஜாரின் ருஷியாவின், யப்பானின் இயந்திர வளர்ச்சிகளைச் சற்றுக் கவனித்தால் இயந்திர வளர்ச்சியின் அடிப்படை, சூழ்நிலைபற்றிய வித்தியாசங்கள் எவ்வளவு முக்கியமானவையென்பது விளங்கும். தீவிர குரோத மனப்பான்மைச் சூழலிற் பிரான்ஸின் இயந்திர வளர்ச்சி ஏற்பட்டது. நிலப் பிரபுத்துவ ஆட்சியை அழித்த ஆவேச காலத்தில் பிற நாட்டு நிலப் பிரபுத்துவ சக்திகளின் பாரதூரமான தலையீட்டுக்கெதிராக பிரெஞ்சு இயந்திர வளர்ச்சியேற்பட்டது. ஆகையினுலே பிரெஞ்சு இயந்திரவளர்ச்சிகளின் தன்மை பிரித்தானிய அமெரிக்க இயந்திர வளர்ச்சிகளின் தன்மையிலிருந்து வித்தியாசப்பட்டது. பிரித்தானிய, அமெரிக்க உள்நாட்டு சமுதாயங்களிற் காணப்படும் பரஸ்பர நேசபாவமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இரு காரணங்களாற் பிரான்சில் அதே அளவிற்கு ஏற்படவில்லை. பிரித்தானிய இயந்திர வளர்ச்சி போட்டியின்றித் தீவிரமாவதற்கு அது பெரும் ஏகாதிபத்தியத்தை 19 ஆம் நூற்றுண்டிலேயே பெற்றிருந்தது. கனடா, அவுஸ்திரேலியா இந்தியா—இவைகளின் விசாலமும் வியாபாரச் சந்தர்ப்பங்களும் 19ஆம் நூற்றுண்டில் எவ்வளவாக விரிந்திருக்கும் என்பதை யூகித்தேயறியலாம். கனடாவையும் இந்தியாவையும் பிரான்ஸ் பிரித்தானியாவுக்கு கைத்தொழிற் புரட்சிக்குமுன்பே இழந்தது. ஐக்கிய அமெரிக்கா 19ஆம் நூற்றுண்டில் உள்நாட்டு வளர்ச்சியில் இயந்திர வளர்ச்சியை லயிக்கவிட முடிந்ததும், பிரித்தானியா 19ஆம் நூற்றுண்டிற் பிரபுத்துவ முரண்பாடுகள் குறைந்த உள்நாட்டு அடிப்படையில் கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா முதலியவற்றின் வியாபார சந்தர்ப்பங்களை உபயோகிக்க முடிந்ததும் மேலே குறித்த இரண்டு காரணங்களையும் விளக்குகின்றன. ஆகையினுலே தான் பிரான்சின் இயந்திர வளர்ச்சி குரோதங்கள் நிறைந்த சூழ்நிலையில் ஏற்பட்டுவந்து பிரெஞ்சு உள்நாட்டுச் சமுதாயத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தியது. ஹிட்லரிடம் பிரான்ஸ் சரணடைந்தமைக்கும் பிரித்தானியா தீவிரமாக எதிர்ப்பை நடத்தியமைக்கும் இந்த வித்தியாச அடிப்படைகளும் சூழ்நிலைகளும் தான் காரணங்கள்.

## ஜேர்மனி, இத்தாலி, யப்பான்

ஜேர்மனியும், இத்தாலியும், யப்பானும் இயந்திர வளர்ச்சியை வேறு அடிப்படையிலும் வேறு சூழ்நிலையிலும் ஏற்படுத்தின. பிரபுத்துவ சக்திகளும், இயந்திர வளர்ச்சியை 19ஆம் நூற்றுண்டில் ஏற்படுத்தத் தொடங்கிய மத்திய வர்க்கச் சக்திகளும் இம் மூன்று தேசங்களிலும் இணைந்து இயந்திர வளர்ச்சியை முற்ற முற்றப் பிற்போக்குத் தன்மையான சமூக பண்பாட்டு முறைகளை ஏற்படுத்த உபயோகித்தன.

எனவேதான் பிரித்தானியாவும், அமெரிக்காவும், பிரான்ஸும் சனநாயக தேசங்களென்றும் ஜேர்மனி, இத்தாலி, யப்பான் பாசிச தேசங்களெனவும் சரித்திர முறையாகப் பிரிக்கப்பட்டன.

எனவே, இயந்திர வளர்ச்சியின் தன்மை ஒரு தேசத்தின் சரித்திர முறையான அடிப்படையையும் தேசிய, சர்வதேசிய சூழ்நிலைகளையும் பொறுத்திருக்கின்றது. விஞ்ஞானமும் இயந்திரமும் எந்த சமூக சக்திகளுடன், பண்பாட்டுக் கருத்துக்களுடன் இணைகின்றனவென்பது சமுதாய வளர்ச்சியைப் பெருமளவாகப் பாதிக்கும்.

இயந்திரமும் இயந்திர வளர்ச்சியை 20ஆம் நூற்றுண்டுக்கு முன்பு தொடங்கிய தேசங்களின் உள்நாட்டு சமுதாயப் போக்கும் என்னும் விஷயம் பற்றி சிறிது விளங்க எத்தனித்தோம். அடுத்த கட்டுரையில் இயந்திரமும் இயந்திர வளர்ச்சி யற்ற நாடுகளும் என்பது பற்றி ஆராய்வோம்.

# திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன்



திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன்

இந்தியாவிலுள்ள இலங்கை மாணவர் சங்கத் தலைவரான திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் சமீபத்தற் கல்கத்தாவில் நடைபெற்ற வடவங்கத்துக் கல்லூரிகளின் மாணவர் சங்கக் கூட்டத்துக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். கல்கத்தா பரி. பவுல் கல்லூரியிற் பயிலும் ஸ்ரீபாஸ்கரன் அக கல்லூரி மாணவர் சங்கத் தலைவராகவும் பணி யாற்றுகின்றூர். இக் கல்லூரியின் வரலாற்றில் வங்கத்தைச் சேராத ஒரு மாணவன் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது இம்முறையேயாகும். இவர் மயிலிட்டி திரு. எஸ். சுவாமிநாதன் ஜே. பி. அவர்களின் குமாரனுவார்.

**அறிவித்தல்**

விஜய தசமி விடுமுறை காரணமாக ஈழகேசரி 30-10-55 இதழ் வெளிவர மாட்டாது.

அதிபர்
ஈழகேசரி


# ஈழகேசரி

சுன்னுகம் மன்மத-ஐப்பசி ௬
— காசித் ஆண்டு 86 —
பேகர்தம் இல. 835


## உறுதி மொழி!

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளித்து அவை நாடெங்கணும் அரசகரும மொழிகளாக அமையவேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்காக அரசியற் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற பிரேரணை சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபையில் டக்டர் என். எம். பெரேரா அவர்களாற் சமர்ப்பிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நடைபெற்ற விவாதம் எவ்வித முடிபுமின்றியும் காலவரையின்றியும் பின்போடப்பட்டிருக்கின்றது.

நாட்டு மக்களிடையே மிகுந்த கிளர்ச்சியை உண்டாக்கியுள்ள அரசகரும மொழிகள் சம்பந்தமான இவ்விவாதம் காலவரையின்றிப் பின்போடப்பட்டிருப்பது மிகுந்த சந்தேகத்தையுண்டாக்கி யிருக்கின்றது. இது ஒரு புறமாக, டாக்டர் என். எம். பெரேரா அவர்களின் பிரேரணை குறித்து முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் நாட்டுமக்களுக்கு அளித்துள்ள விளக்கத்தை ஆராய்வோம்.

தேசிய மொழிகளையே அரசகருமமொழிகளாக்குவதென 1945ஆம் ஆண்டில் அரசாங்கசபை ஏற்றுக்கொண்டது. இதனை முதலமைச்சர் எடுத்துக்காட்டி சிங்களமுந் தமிழும் அரச கருமமொழிகளாக நாடு முழுவதிலும் திகழுமென உறுதி கூறியிருக்கின்றார். யூ. என். பி. கட்சியும் இதனை ஆதரிக்கின்றதென்பதை நாமறிவோம். அவ்வாறே இடதுசாரிக் கட்சியினரும் இருமொழிக்கொள்கையை ஆதரித்து நிற்கின்றனர். மலலசேகராக்களும் மேத்தானந்தாக்களும், தஹநாயகாக்களும் பொய்வேடம் புனைந்துள்ள சில பிக்குகளுமே இருமொழிக் கொள்கையை ஆட்சேபித்துச் சிங்களத்தைச் சிங்காசனத்தில் அமர்த்தவேண்டுமெனப் பெருங் கிளர்ச்சிசெய்து, இரத்தம் சிந்துகின்ற அளவுக்கு நாட்டிற் கலக நிலையை உண்டாக்கி வருகின்றனர்.

இப் பயங்கரநிலையைக்கண்டுதான் இரு மொழிக் கொள்கை சரியாசனம்பெறச் சட்டமாக வேண்டுமெனத் தமிழ்பேசும் மக்கள் தமது உரிமையை வற்புறுத்தி நிற்கின்றனர். அரசாங்கத்தின் உண்மையான நோக்கமும் இதுவேயாகின் டக்டர் என். எம். பெரேரா அவர்களின் பிரேரணை 'ஒரு தேர்தல் அதிர்வேட்டு' என முதலமைச்சர் கூறி அதனைத் தட்டிக்கழியாது அரசியற் சட்டத்தையே திருத்திச் சிறுபான்மையினரின் பீதியை நீக்கியிருக்கலாம். அதை விடுத்துத் தேசிய மொழிகளை அரசகரும மொழிகளாக்கும் கொள்கை அரசாங்கத்தால் முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதை முதலமைச்சர் மீண்டும் நினைவூட்டி, இக் கொள்கையில் ஏதாவது மாற்றம் செய்வதானால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் பூரணமான ஒரு பொதுக் கூட்டத்திலேதான் பரிசிலனை செய்து முடிவாக்க வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றார். இது ஆச்சரிமானதொரு கூற்றாகும்!

இன்று ஆட்சிப்பீடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே அமர்ந்திருந்து செங்கோலோச்சுகின்றது. இக் கட்சி இருமொழிக் கொள்கையை ஆதரித்து நாடெங்கும் தமது சகாக்கள் மூலம் காதுபுளிக்கப் பிரசாரம் செய்து வருகின்றது. அதே கட்சி இருமொழிக் கொள்கையைச் சட்டபூர்வமாக ஏற்று அரசியற் சட்டத்தைத் திருத்துவதற்குச் சாக்குப் போக்குக் கூறிவருவது தான் விந்தையினும்விந்தையாகவிருக்கின்றது.

முதலமைச்சர் சேர் ஜோன் உறுதிமொழிகள் கூறுவதில் ஒரு 'புலி' என்பதை நாமறிவோம். அப்படியானதொரு உறுதிமொழியைத்தான் சென்ற புதன்கிழமையன்றும் பிரதிநிதிகள் சபையிற் கூறித் தமிழ் பேசும் மக்களைச் சமாதானப்படுத்த முயன்றிருக்கின்றார். இதைக் கேட்டுத் தமிழ்ப் பேசும் மக்கள் திருப்தியடைந்துவிட முடியாது. தமிழ்மொழி சம அந்தஸ்துப்பெற்று நாடெங்கும் விளங்குமென்ற திருத்தம் அரசியற் சட்டத்தில் இடம்பெறவேண்டும். திடமான அந்நிலையைப் பெறும் வரை தமிழ் பேசும் மக்கள் சலியாது உழைக்கவேண்டும்.

வாழும் சமுதாயத்துக்கு அவர்கள் பேசும் மொழியே உயிர்......எனவே, தமிழ் மக்கள் தம் தாய்மொழியைத் தக்க முறையிற் பேணிக் காப்பதன் மூலம் தமிழினத்தையே காப்பாற்றிக் கொள்கிறார்கள் என்பது பைந்தமிழ் வளர்க்கும் குன்றக்குடி அடிகளார் தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியாகும். இதனை உளத்திற்கொண்டு அரசியல் வாதிகள் விரிக்கும் வலைக்குட் சிக்குப்படாது நந் தமிழ் மொழியைப் பேணிக்காப்பது தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரினதுங் கடமையாகும்.

### வீதிகளிலும்
#### சாதிப் பாகுபாடா?

சாதிப் பாகுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாண நகரிலுள்ள இடங்கள், வீதிகள், ஒழுங்கைகள் ஆகியவற்றுக்கு அமைந்திருக்கும் பெயர்களை நீக்கி அவற்றுக்கு வேறு புதிய பெயர்களைச் சூட்டவேண்டுமென்று வண்ணார்பண்ணை உறுப்பினரான திரு. எம். கார்த்திகேசன் கொண்டுவந்த பிரேரணையை நகரசபை பொதுவேலைக்குழுவின் பரிசிலனைக்கு விட்டுள்ளது. இப் பிரேரணை சென்ற 14-10-55 வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்திற் சமர்ப்பிக்கப்பட்டது.

'இத்தகைய பெயர்களைச் சபையின் விவகாரங்களிலிருந்தும், பதிவுகளிலிருந்தும் நீக்குவதாக எண்ணங் கொண்டு புதிய பெயர்களைச் சிபார்சு செய்யும் பொறுப்பைப் பொதுவேலைப்பகுதிக் குழுவிடம் ஒப்படைப்பது' என்பதே அப் பிரேரணையின் சாரமாகும்.

# பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

'பெயரில் என்ன இருக்கின்றது? தாமரைக்கு வெவ்வேறு பெயரிட்டாலும், தாமரை தாமரையேதான். அது எவருடனும் தாவப் போவதில்லை' எனச் சிலர் பேசுவதுண்டு. ஆனால் இந்தப் பெயரிலேதான் இன்று எல்லாம் தங்கியிருக்கின்றதென்பதைச் சிறிது கவனித்தால் விளங்கும். வெள்ளித்திரையில் மின்னும் சினிமா நட்சத்திரங்கள் எல்லாம் பிறந்து, வளர்ந்து, பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படிக்கும்போது அவர்களின் பெயர்களைப்பற்றி அவர்கள் சிரத்தை எடுப்பதில்லை. ஆனால், பாடகிகளாகவும் சினிமா நடிகைகளாகவும் தோன்றியவுடன் அவர்களின் பெயர்கள் அற்புதமாக மாற்றம் அடைந்துவிடுகின்றன. பத்திரகாளி பத்மாவாகவும், வள்ளியம்மை வனஜா ஆகவும் மாறுவது தமிழ்நாடறிந்த உண்மை. பெண்மணிகளைப் பொறுத்தவரையில் இப் பெயர் அலங்காரத்தைப்பற்றி எவரும் கவலைகொள்ளப் போவதில்லை. ஆனால், தேசங்களுக்கும் பெயர்மாற்றியமைக்க வேண்டுமெனச் சிலர் ஆசைப்படுவதுதான் வேடிக்கையாகவிருக்கின்றது. தாழ்வு மனப்பான்மையினால் எழும் இந்த 'விபரீதம்' இலங்கையில் வாழும் சிங்களரையும் அலைக்கழிக்கின்றது.

களுத்துறைப் பட்டினசங்கத்து உபதலைவரான இராஜபக்ஸ அவர்கள் இலங்கையின் பெயரை 'சிங்ஹலன்ட்' (SINHALAND) என மாற்ற விரும்பி அதற்கான காரணங்களையும் காட்டியிருக்கின்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஓர் உறுப்பினர் உடனே எழுந்து பெயர் மாற்றத்தை ஆட்சேபித்ததுமன்றி 'இங்கிலன்ட்' (England) என்பதைப் போல் 'சிங்ஹலன்ட்' என இலங்கைக்குப் பெயர் சூட்ட வேண்டியதில்லை. விரும்பினால் 'ஹெலதீவ' அல்லது 'ஸ்ரீலங்கா' எனப் பெயர்வைக்கலாம் என யோசனை கூறியிருக்கின்றார். இலங்கைச் சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு இலங்கைத் தீவு எத்தனையோ பெயர்களால் வழங்கப்பட்டு வந்திருப்பதை அறிவார்கள். ஆனால் அதே இலங்கைத்தீவு அப்படியே தான் நீலக் கடலாற் சூழ்ந்து விளங்குகின்றது. இருந்தாற்போலிருந்து, சுதந்திரங்கிடைத்தவுடன் சில போலிகளே நிலைதவறிச் செய்வது யாதெனத் தெரியாது திகைக்கின்றனர்.

ஒருவேளை மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக இப் பதவிக்கு வரமுன்னர் 'இலங்கையைச் சிறிய இங்கிலாந்து' எனக் கூறியதை எண்ணி 'சிங்ஹலன்ட்' என இலங்கைக்குப் பெயர் சூட்டுவதைக் களுத்துறைத் தேசாபிமானி விரும்புகின்றார் போலும்! சரி சுதந்திரத் தீவினிலே பெயரைச் சூட்டிப் பார்க்கவேண்டியதுதானே!!

❦

உப்புவெளியில்

திருகோணமலையில் ஒரு மூலையில் தன்பாட்டிற் படுத்துறங்கும் உப்பு வெளியைச் சிங்களச்செல்வி ஒருவர் தட்டியெழுப்பி யிருக்கின்றார். சமீபத்தில் அங்கு சிங்கள சாதிய சங்கத்தின் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற் செல்வி லீலாவதி செல்லூஸ் என்னும் சிங்கள மங்கை யொருவர் சிங்களப் பெண்மணிகளுக்கு அறிவுரை புகன்று அவர்களை மதம், மொழி, கலாச்சாரம் என்பனவற்றில் அக்கறை எடுக்குமாறு இடித்துரைத் திருக்கின்றார், 'முகத்துக்கு முக்காடிட்டு வாழும் மூஸ்லீம் பெண்கள் கூட இன்று சிங்களமே தேசிய மொழியாக வேண்டுமெனக் கிளர்ச்சி செய்யும் போது, சிங்களப் பெண்கள் தங்கள் சீர்சிறப்புக்களை மறந்து அடுக்களைக்குள் அடைபட்டுக் கிடக்கின்றனர்' என அப் பெண்மணி நெருப்பெடுத் திருக்கின்றார்.

அத்துடன் சரித்திர சம்பவங்களையும் எடுத்துக் காட்டிச் சிங்களப் பெண்களுக்கு உரோசம் பிறக்கச் செய்திருக்கின்றார். துட்டகைமுனு தனது தாயாரின் யோசனையைக் கேட்டே யுத்தங்களில் வெற்றிபெற முடிந்ததெனவும், சோமாதேவி தமது கணவன் வலகம்பாவைக் காப்பாற்றுவதற்காக நாட்டைக் கைப்பற்ற வந்த எதிரிகளை எதிர்க்கத் தயங்கவில்லை யெனவும் அவர் கூறியிருக்கின்றார்.

இவற்றை யெல்லாங் கவனிக்கும்போது சிங்களர் கிளர்ந்தெழுந்து தமிழருடன் போராட வேண்டுமென அச் சிங்களப் பெண்மணி சொல்லாமற் சொல்லுகின்றார் என்றே எண்ணிச் சிரிக்கவேண்டி யிருக்கின்றது.

### மொழிக்கொள்கையில் மாற்றமில்லை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதைச் சுட்டிக்காட்டித் தற்காலிகமான தற்பாதுகாப்புத் தேடிக்கொண்டவர், இப்போதும் கொழும்பு மேயராக இருந்துவரும் டாக்டர் என். எம். பெரேரா அவர்கள்தான். டக்டர் பெரேராவை வீழ்த்தியே தீருவதென்று முயற்சிசெய்த வலதுசாரி உறுப்பினர்கள் வெட்கித் தலைகுனியும் வகையிலே, கடைசி நேரத்தில், மேற்படி தவறைச் சுட்டிக்காட்டித் தப்பித்துக்கொண்டார் டக்டர் பெரேரா.

இனி அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமானால் ஆறுமாதம் செல்லவேண்டுமென்று சிலர் நகரசபை அமைப்பு விதிகளுக்கு வியாக்கியானம்தருகிறார்கள் எனினும், இது நிச்சயமாகத் தெளிவாகவில்லை என்ற காரணத்தினாலே, உடனடியாக, டக்டர் பெரேரா அவர்களைப் பதவி நீக்கம் செய்வது சாத்தியமா என்பதையிட்டு வலதுசாரி உறுப்பினர்கள், சட்டநிபுணர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்கள்.

### குன்றக்குடி அடிகளார்

சமீபத்தில் வட பகுதியில் நடந்த பல கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிய குன்றக்குடி அடிகளார் தவப் பெருந்திரு அருணாசல தேசிகசுவாமிகள் சென்ற வாரஇறுதியிலே இங்கு நடைபெற்ற சில கூட்டங்களிலே பங்குபற்றினார்கள். பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்திலும், சைவ மங்கையர் கழகத்திலும், அடிகளாரின் அறிவுரைகளைக் கேட்க மக்கள் திரண்டிருந்தனர். சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற கூட்டம் இயற்றமிழ் விழாவாக நடைபெற்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்துக்குச்சங்கத்தலைவர் திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் தலைமை தாங்கினார்கள். குன்றக்குடி அடிகளாரும், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களும் இனியவிரிவுரைகள் ஆற்றினார்கள். தமிழரைப்போலத் தாய்மொழியைப் புறக்கணித்த இனத்தவர் வேறு யாருமே இடையாதென்று கூறிய அடிகளார், தமிழ் இளைஞர்களிடையே மொழியபிமானத்தைத் தூண்டும் வகையிலேயேபேசினார்கள்

# மொழிச் சிக்கல் சுமுகமாக நீங்கவேண்டும்

## குன்றக்குடி அடிகளார் கருத்து

யாழ்ப்பாணம்

மூன்றுவாரங்களுக்கு முன்னர் ஈழத்துக்கு வருகை புரிந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அறிவுரைகள் ஆற்றிய குன்றக்குடி அடிகளார் சென்ற 18-10-55 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து விமான மூலம் தாய்நாடு திரும்பினார்கள். அடிகளார் பின்வரும் செய்தியைப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளார்கள்.

சென்ற இருபது நாட்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்ததில் நான் அடைந்த அனுபவங்கள் பல. பொதுவாக மக்களிடையே நல்ல சமயப் பற்று இருக்கிறது. ஆனால் அப்பற்று இன்னும் தெளிவாகவும் உறுதியுடையதாகவும் இருப்பது நல்லது. இங்கு தமிழ் சிங்களமொழிச்சிக்கல் பெரும் தலைவலியாக மாறியிருக்கிறது. இத்தலைவலி மனிதப் பண்பாட்டின் அடிப்படையிற் சமுகமாக நீங்குமென்று நம்புகிறேன்.

மற்றும், மக்களிடையே சாதியுணர்ச்சி, மதுவருந்தல், கோயில்களிற் பலியிடுதல் முதலிய தீய பழக்கங்கள் காணப்படுகின்றன. மக்கள் அவற்றை விலக்கிக் கொள்ளுதல் வேண்டும். இத்துறையிற் பத்திரிகைகள் அனைத்தும் உழைக்க வேண்டுமென வேண்டிக்கொள்ளுகின்றேன்.

## கலைமகள் விழா



நவராத்திரி காலம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியது. வரும் திங்கள் மகாநவமியன்று கலாசாலைகளிலும் மற்றும் இடங்களிலும் கலைமகள் விழா நடாத்தி மக்கள் ஏற்ற ஒழுங்குகள் செய்கின்றனர். இது கலைஞர்களின் பெருவிழா நாளாகும். புதுக் கலைகளிற் புக விரும்புவோர் இத்தினம் அங்குரார்ப்பணம் செய்து கலைமகள் கடாட்சத்தைப் பெறுவார்களாக.

## இளவரசி காதல்
### வகைவகையான வதந்திகள்

பிரித்தானிய இளவரசியான மார்க்ரேட்டின் காதல் மர்மம்பற்றிய செய்திகளை வெளியிடுவதில் அங்குள்ள பிரபல பத்திரிகைகளெல்லாம் மிக முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. இதுபற்றித் தலையங்கங்கள்கூடத் தீட்டப்படுகின்றனவென்றால் இளவரசியின் கலியாணத்தில் அப் பத்திரிகைகள் எவ்வளவுதூரம் அக்கறை காட்டுகின்றனவென்பது தெரியவருகிறது.

ஆனால் இளவரசி தன் பால்யக் காதலனாகிய காப்டன் டவுண்செண்டை மணப்பாரா அல்லது சகோதரியாகிய மகாராணியினதும் உயர்தர மத குருவினதும் விருப்பப்படி அக் காதலைக் கைவிடுவாரா என்பது இன்னும் மர்மமாகவேயிருக்கிறதாம். சாதாரண குடும்பத்திற் பிறந்தவரும் ஏற்கனவே ஒருதடவை கலியாணம் செய்து மனைவியை விவாகமுறிவு செய்து கொண்டவருமான டவுன்செண்டை இளவரசி கலியாணம் செய்து கொள்வதை இராச குடும்பத்திலுள்ள எவருமே விரும்பவில்லை.

இளவரசியின் இத் திருமணம் சம்பந்தமாகப் பத்திரிகைகள் தினமும் வெளியிடும் கயிறுதிரிப்புகள் விநோதமானவையாக இருக்கின்றன.

தன் பட்டத்தைக்கூடக் காதலுக்காக இளவரசி துறக்க முன்வந்திருக்கிறாரென்று பிரபல ஆங்கிலத்தினசரியொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. பத்திரிகைகளின் ஊக்கங்களையும், கற்பனைகளையும் பார்த்து இளவரசியே ஆச்சரியப்படுகிறாராம்.

மார்கரெட் சமீபத்தில் ஓர் பூங்காவில் தன் காதலனைச் சந்தித்ததுபற்றி வகைவகையான வதந்திகள் உலவுகின்றன. இளவரசியின் திருமணம் பற்றிய திரைமறைவுச் சம்பவம் மகாராணியின் காதல் கலியாணம் என்பனபற்றிக் காணப்பட்ட நிலைவரத்திலும் பார்க்க அதிக பரபரப்பைச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் ஏற்படுத்தியிருக்கிறது.

★ திரு. சுந்தரலிங்கம் பத்திரிகைகளில் எழுதுவதெல்லாம் சிங்கள மக்களிடையே துவேஷத்தை மூட்டுகின்றனவென செனேட்டர் நடேசன் கூறியதாகத் தெரிகிறது.

# தமிழ்த் தலைவர்கள் கிலி!
# புதிய வழி காட்டும் செனேட்டர்
# தோழர் கெனமனின் முன்னேற்றம்!

**நமது நிருபர்**

கொழும்பு

மொழிச் சிக்கல் சம்பந்தமாகத் தென்னிலங்கையிலிருந்து கிளம்பியிருக்கும் புயல் தமிழ்த் தலைவர்கள் சிலரிடம் கிலியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. அவர்களிற் குறிப்பிடத்தக்க ஒரு சில அரசியல்வாதிகள் தமது கடந்தகாலக் கொள்கையைக் கைவிட்டு வேறு நியாயம் பேசுவதற்கு இந்தக் கிலிதான் காரணமாக இருக்கவேண்டும்!

இன்று தாய்மொழிச் சிக்கல்பற்றி எழுந்த நெருக்கடியானது பொறுப்புவாய்ந்தவர்களென்று பொதுமக்களாற் கருதப்பட்டும் ஒரு சிலரைத் தவறான வழிக்கு இழுத்துச்செல்லுகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடந்த எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் கூட்டம் சிலரது மொழிக் கொள்கையை அம்பலப்படுத்திவிட்டது. இக் கூட்டத்தில் திருவாளர் செனேட்டர் நடேசன் சுயமொழிகள் பற்றித் தெரிவித்த புதிய ஆலோசனையைக்கேட்டு அவரது அபிமானிகள் திடுக்கிட்டிருப்பார்களென்பதற்கையமில்லை. கருத்துப் புதியதாயிருக்கிறதே யென்பதுமட்டுமே அதற்குக் காரணமல்ல. முதலாம் இரண்டாம் மொழிகளாக இலங்கையின் தாய்மொழிகள் இருக்கவேண்டுமென்பது அயர்லாந்தை உதாரணம் காட்டி விளக்கியவர் செனேட்டர் நடேசனு என்பதுதான் அந்த அதிர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம். இன்று ஏற்பட்டுள்ள அபாயகரமான அரசியற் சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிக்கப்படுகிறதே யென்று கருதிக் கவலைகொண்டுள்ளவர்கள் இந்த முதலாம் இரண்டாம் மொழிக் கருத்துப்பற்றிக் கவலைப்படுவதில் நியாயமுண்டு. ஆனால் ஆங்கிலத்தின் காலை வருடிச் சதாகாலமும் அதன் தயவிலேயே வாழவேண்டுமென்று எண்ணுபவர்கள் தாய்மொழிகளைப்பற்றி ஏதோ எல்லாம் உளறலாம். இவர்களுக்கு காட்டை யாரண்டாலும்சரிதான்.

சென்ற பொதுத்தேர்தல் காலத்தில் செனேட்டர் நடேசன் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிச் செய்த உபதேசங்களை இன்று எவரும் மறந்திருக்கமாட்டார்கள். சுயநலவாதிகள் சிலர் அவற்றை மறந்திருக்கக்கூடும். இருப்பினும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் வருங்கால நலனைக் கருதியாவது அவர்கள் அக் கருத்துக்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது.

செனேட்டர் நடேசன் அவர்கள் எதிர்க்கட்சிக்கூட்டத்தில் திருவாளர் சுந்தரலிங்கத்தை எதிர்த்துப்பேசுகையில் "அயர்லாந்தில் இரு அரசாங்க மொழிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று முதலாம் மொழியாகவும் மற்றயது இரண்டாம் மொழியாகவும் இருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். இலங்கையைப்பொறுத்த அளவில் இந்த உதாரணம் எந்த அடிப்படையிற் சொல்லப்பட்டதென்பதை அவர் விளக்கிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்.

திரு. சுந்தரலிங்கம் பத்திரிகைகளில் எழுதுவதெல்லாம் சிங்கள மக்களிடையே துவேஷத்தை மூட்டுகின்றனவென செனேட்டர் நடேசன் கூறியதாகத் தெரிகிறது. அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா பதில் அளிக்கையில் திரு. சுந்தரலிங்கத்துக்குச் சிங்களர்மீது துவேஷமில்லை, சேர் ஜோன் அவர்கள்மீதுதான் அவருக்கு ஆத்திரம் எனக் கூறினாராம்!

* * *

டக்டர் என். எம். பெரேரா தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்ற தமது பிரேரணையில் ஒரு [கம்மா (,)] தானும் மாற்றப்போவதில்லையென அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தாராம்.

இந்த நாட்டின் சகல பாகங்களிலும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்று மிக விளக்கமான ஒரு தீர்மானத்தைக் கொம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே நிறைவேற்றி அத் தீர்மானத்தின் அடிப்படையில் இன்று போராடி வருகிறது. ஆனால் எதிர்க்கட்சிக் கூட்டத்தில் தோழர் பீட்டர்கெனமன் திடீரென்று ஓர் புதிய கருத்தை வெளியிட்டிருக்கிறார். சிங்களம் மட்டுமே இலங்கையின் தேசிய மொழியாக வேண்டுமென்றும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் தமிழ் அரசாங்கமொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கையைப் பெரும்பாலும் தாம் ஏற்பதாகத் தோழர் பீட்டர் கெனமன் கூறினாராம்! வெளிநாட்டு நடவடிக்கைகளிற் சிங்கள மொழியை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என அவர் மேலும் ஒருபடி முன்னேறிக் கூறியிருக்கிறார். இக் கூற்று உண்மையானதா அல்லது வேண்டுமென்றே யாராவது கிளப்பிவிட்டுள்ள கற்பனையா என்பதை இன்னும் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. தோழர் கெனமன் மீது கொண்டுள்ள அபார நம்பிக்கையைப் பொதுமக்கள் இன்னும் இழந்துவிடவில்லை யென்றே சொல்லவேண்டும். இவ்வாரம் யாழ்ப்பாணம் செல்லும் அவர் இதனைத் தெளிவாக்கவேண்டியது அவசியமாகும்!


## வெளிவந்துவிட்டது!

## மொழிப்பயிற்சி - 5ஆம் புத்தகம்

### 6ஆம் வகுப்புக்கு

பள்ளிக்கூட மாணவர்கள் மொழி ஆட்சியில் நிலையான—இலக்கண அறிவுடன் இயைந்த—அறிவை மத்திய வகுப்புக்களிலேயே பெற முடியும். இவ் வறிவு பூரணமடைய, நன்கு ஆராய்ந்து, திட்டப்படி ஒழுங்குசெய்யப்பட்ட மொழிப்பயிற்சி நூல்கள் பேருதவி புரியும்.

மத்திய வகுப்புக்களுக்குரிய மொழிப்பயிற்சி (விளக்க) நூல்கள் சிறந்த முறையில் இதுகாறும் வெளிவரவில்லை. ஆகையால், எமது ஆரம்ப வகுப்புக்களுக்குரிய மொழிப்பயிற்சி (1, 2, 3, 4ஆம்) நூல்களைத் தொடர்ந்து 6, 7, 8ஆம் வகுப்புக்களுக்கு மொழிப்பயிற்சி நூல்கள் தனித்தனி வெளியிட எண்ணியுள்ளோம். அம் முயற்சியின் முதல் வெளியீடாகிய மொழிப்பயிற்சி 5ஆம் புத்தகம் (6ஆம் வகுப்புக்கு)

**15-9-55இல் வெளிவந்துவிட்டது.**

**இந்நூல், அண்மையில் அரசினரால் 6ஆம் வகுப்புக்கென வெளியிடப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு இயைய எழுதப்பட்டது.**

| விலை விபரம்: | ரு. ச. |
|---|---|
| * மொழிப்பயிற்சி 1ஆம் புத்தகம் | 60 |
| * „ 2 „ „ | 85 |
| * „ 3 „ „ | 1-00 |
| * „ 4 „ „ | 1-10 |
| „ 5 „ „ | 1-20 |

## வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
## சுன்னாகம்

*வித்தியா பிரசுர சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை.


## அமுதமொழி

பிறரிடம் குறை கண்டு பிடிப்பது சுலபம், ஆனால் தன்குற்றத்தைத் தானே அறிவதுதான் சிரமம்.

—புத்தர்

## அந்நிய ராட்சியில் அடிமை
### சுதந்திரம் பெற்றுப் பிளவுபடுவதா?

ஐக்கிய இலங்கையென்று எண்ணுபவர்கள் சிங்களம் தமிழ் எனும் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்தைக் கொடுக்கத் தயங்கக்கூடாது. அந்நியராட்சியில் அடிமையுற்றிருந்தபோது ஐக்கியப்பட்டிருந்த இரு இனங்களும் சுதந்திரமடைந்தபோது பிளவுபட்டன, என்று சொல்லக்கூடாது. இப்பொழுது மொழிச்சிக்கல் அரசாங்கத்துக்குக் கவலை கொடுக்கும் ஒரு முக்கிய விடயமாகிவிட்டது சம அந்தஸ்தை வழங்குதலே அரசாங்கத்தின் முடிவான கொள்கையாக இருந்தபோதிலும் பொதுத் தேர்தலுக்கு வகுப்புவாதத்தைத் துணைக்கொள்ளக் கண்ட அரசியல் வாதிகள் இக் கிளர்ச்சியைக் கிளப்பி விட்டனர். இவ்வாறு கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது கூறினர்.

**அடிகளார் ஆச்சரியம்**

ஆங்கிலமொழி இன்னும் போதனா மொழியாக நிலவுவதைக்காண ஆச்சரியமுண்டாகிறது. போதனா மொழி மாற்றம் தாமதிக்கப்பட்டால் தாய்மொழி முன்னேற்றம் எவ்வாறு உண்டாகும் ஆசிரியர்கள் மனப்பூர்வமாக முயற்சித்தால் சுயமொழியிற் கற்பிக்க முடியாதது எதுவும் இல்லை. எனத் திருப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் இவ் விழாவில் நிகழ்த்திய தமது விரிவுரையிற் குறிப்பிட்டார்.

இவ்விழா வடபாக வித்தியாதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் தலைமையில் 17-10-55ல் நடைபெற்றது. திருமதி சோமசேகரம் பரிசுகளை வழங்கினர்.

## கூட்டுறவு விலைபொருட் சங்கங்களின் சமாஜம்
### நிர்வாகஸ்தர் பதவி துறத்தல்

வடபகுதி விவசாயஉற்பத்தியாளரின் ஐக்கிய சமாசத்தின் நிர்வாகசபை உறுப்பினர் 20-10-55 இரவு 8 மணியளவில் தமது பதவிகளைத் துறந்தனர். உற்பத்தியாளரின் வாழைப் பழங்களை விற்பனைப்பகுதிக்கு விற்றுக் கொடுப்பதற்கு எல்லாச் சங்கங்களுக்கும் சந்தர்ப்பங் கொடுப்பதற்காக வகுத்த ஒழுங்கை யாழ்ப்பாண உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இருவரும் நிராகரித்து சமாசத்தின் உரிமைக்கும் கடமைக்கும் முரண்பட நடந்துகொண்டமையே இதற்குக் காரணம் என்று அறியப்படுகின்றது.

## திரு. வ. குலநாயகம்

### புதிய நியமனம்

திரு. வ. குலநாயகம் F. R. I. C., D. I. C. அவர்கள் இரசாயன ஆராய்ச்சிப் பகுதித் தலைவராய் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வயாவிளான், காலஞ்சென்ற திரு. நீ. வல்லிபுரமவர்களின் மூத்த புதல்வனும் வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் ஜே. பி. அவர்களின் சகோதரனுமாவர்.

---

## முகம்மது ரூபிப் புலவர்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் எழுதிய ஆண்டு முதலியனவும் குறிப்பது. இரண்டாவது செய்யுளின் முடிவு கடிதத்துக்கேற்ற பொருள் நிறைவினையுடையதாய்ச் சகநலம் கூறி அமைகின்றது. பட்டிமேடுவயல் விளைந்து கிடப்பதையும், குடாக்கரை வயல் விதைப்புக்கு எற்பாடுகள் ஆகியிருப்பதையும் காட்டுவது இரண்டாம் செய்யுளின் முதற்பகுதி. கருங்கொடித்தீவு என்பது அக்கரைப்பற்றிலே புலவர் வாழ்ந்த பகுதியைக் குறிப்பிடும் பெயராகும். அவ்விடத்தின் இனிய இயற்கையழகு, தாய்நாட்டன்பு மிகுந்த புலவரது பாவினை அணி செய்து நிற்கக் காணலாம்.

இவரோடிணைந்த பெரு நண்பராகவும், பண்பட்ட செல்வராகவும் இருந்தவர் இசுமாலெவ்வை முகையதீன் என்னும் போடியார். சிறந்த இஸ்லாமிய அறிஞராயும் புலவர்யாலும் தமிழ்மொழியின்யாலும் நிறைந்த மதிப்புடையராயும் வாழ்ந்த போடியார் இவ்வுலகை விட்டுச் சென்றநாளில் ரூபிப் புலவர் புத்தளத்துக்குச் சென்றிருந்தனர். தன்னரிய நண்பனது பெரும் பிரிவினால் ஏற்பட்ட துன்பமும், அக்காலத்தே தான் அருகில் இல்லாமற் போனமையால் வந்த வருத்தமும் இவரது உள்ளத்தை மிகுதியும் உருக்கின. உடனே அப் பொருள் மீது ஒப்பாரி வடிவிலே கவிதைத் தேவியும் புலவர் நாவில் உதயமாயினள்.

"புத்தளத்தில் நானிருந்தேன்
 நீரிந்தப்
புவியனைத்து போனதினம்
புரவநிராரும்வருநிருதாமும்
குருகினமெலையும்
படுத்துறங்கும் நடுமத்தியில்
நடுமத்திய சாமம்
என்னுடைய நன்று பல்லிலொன்று
நண்பொடு எனதுடை
கொம்புடை முடியினுமோர்
பல்தகாஞு தொருவம்புரவரசும் கனு
அன்றிரவு கண்டனல்லோ"

நண்பரது பிரிவு நடந்த அன்றிரவு வந்த பொல்லாக் கனவிடை வீழ்ந்த கொடுப்புப்பல்லும் தலையின் அரைவாசி மயிரும், அச்சாக்கேட்டிற்கு ஆன கெட்ட சகுனமே என்பதை உருக்கமாய்க் குறிப்பிட்டு இவருடைய கவிதையுள்ளம் புலம்புவதை நாம் காணலாகும். இப்பாடல்களெல்லாம் 'முகையதீன் ஒப்பாரி' என்ற தலைப்புடன் நடந்தாலும் அவையனைத்தும் தொகுக்கப் பெற்ற நூல் வடிவு இன்னும் கிடைத்திலது. இதனைவிட வயல் வருணனை முதலாக இவரால் பாடப்பெற்றனவாக வழங்கும் தனிப் பாடல்களும் பல கேட்கப்படுகின்றன.

கவிதையுருவில் இன்று வாழ்பவர்களும், தமிழ் வளர்த்த முஸ்லீம் பாவலர் வரிசையினை அழகுபடுத்தி ஈழத்துக்குப் பெருமை தந்து நிற்பவர்களுமான இவர்கள் புகழ் என்றும் சென்று விளங்குதல் வேண்டும்.

---

கிராமியக் கவிதை : : அ. ஸ. அப்துஸ்ஸமது

# சிங்காரச் சிரிப்பொலி

## மந்திரம் மங்கையை மயக்குமா?

அவன் அந்தப் பாதையாற் போவான். அவள், வீட்டு முன்றிலில் நிற்பாள். அவளுக்கென்றேதான் அவன் அந்தப் பாதையாற் செல்லலாயினன்.

அவள் பருவக் குமரி. அழகு அவள் உடலெல்லாம் முலாம் பூசியிருந்தது. பருவக் கவர்ச்சியானது அவளுக்குப் பாங்கான தோற்றத்தைக் கொடுத்தது. மான் போற் துள்ளுவாள்; மயில் போல ஆடுவாள்; வேல் விழியை எங்கும் வீசுவாள். அவள் உடம்பில் ஓடும் குளிர்ச்சி நிறைந்த இளம் இரத்தம் அவளை என்னென்னவோ செய்யத் தூண்டியது. அவள் முல்லைச் சிரிப்புக்கு முழுநிலாக்கூட உவமையாகாது.

இந்த நிலையை அவனால் எத்தனைநாள்தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்! அவள் சிரிக்கும்போது அவன் உள்ளமே நெகிழும். அவள் ஆடும்போது அவன் இதயமே குமுறும். இளம் உள்ளம் அது. எத்தனை நாட்களுக்கென்று சகிப்பது. ஒருமுறை அவளிடம் பேசிவிடுவதுதானே என எண்ணினான். ஆனால் அவளோ வயதிற் கூடியவள். அந்தப் 'பெரியவளி'டம் தனது எண்ணத்தை எப்படி வெளியிடுவது. 'அக்கா' என்று அழைப்பது! இந் நினைவில் அவன் அல்லும், பகலும் வாடிக்கொண்டிருந்தான். எல்லாம் இவள் தோற்றம், எப்பொழுதும் இவள் நினைவு. அவளின் சிங்காரச் சிரிப்பொலி அவன் காதுகளில் நிரந்தர கீதம் பாடிக்கொண்டிருந்தது. ஒருநாள் நெஞ்சைத் தட்டிக்கொண்டு கேட்டே விட்டான்.

வாழைப்பழமே
 வம்பரையிற்சர்க்கரையே
உள்ளங்கைத் தேனே
 உருகிறன்டி உன்னாலே.

அவன் கையாண்ட உவமையணிகள் அவன் உள்ளத் தாபத்தை எடுத்துக் காட்டுகின்றன. வாழைப்பழமே என்றான் அவளை. பின்னரும் வம்பரையிற் சக்கரையே என்கிறான். 'வம்பரை' என்பது திறமான ஓர் தேனினத்தின் பெயர். இங்கே 'மிக மதுரமான சர்க்கரை' என்பதைக் குறிப்பிட அப்பதத்தைக் கையாளுகிறான். இன்னும் திருப்தியேற்படவில்லை. உள்ளங்கைத் தேனே என்கிறான். தேன் உருசியானது. ஆனால் அதை உண்ணும் முறை சிலருக்குத் தெரியாது, உள்ளங்கையிலே தேனை ஊற்றி நக்கிச் சாப்பிடுவதுதான், அதன் நற்சுவையை அனுபவிக்கும் முறை. எனவேதான் உள்ளங்கையில் ஊற்றிய தேனாக வர்ணிக்கிறான் அவளை. 'உருகுகிறேன் உன்னாலே'. என்பதிலிருந்து அவன் வேதனையை வெளிக்காட்டுகிறான். 'டி' என்ற பெண்பால் விகுதியை உபயோகிப்பதனால், அவள் வயதில் கூடியவளாயினும், தன் காதலியாகவும், தம்மிலும் குறைந்தவளாகவும் பாவனை செய்கிறான்.

இதைக்கேட்டு அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்புக்கே அவன் எல்லை காணவில்லை. அவனை ஒருமுறை அனுதாபக் கண் கொண்டு பார்த்துவிட்டுப் பாடுகிறாள். "நீயே கேட்கவேண்டியதில்லை, நானே உன்னை வாவென்றழைப்பேன். எனது அழகிய வட்ட முகத்தை உனக்கு முத்தமிடத் தருவேன். உன் தாகம் என்னவென்பதையும் அறிவேன். என்று பாடுகின்றாள்:

வாவென் றழைப்பேன்
 வட்டமுகம் நான்
 தருவேன்
தாகம் தணிப்பேன்–நீங்க
 தம்பியல்லோ ஓர்
 முறைக்கு.

அவன் முகம் ஓடிக் கறுத்து விடுகிறது. "என்னைப் படாதபாடு படுத்தி இந்தப் பரிதாப நிலைக்கு கொண்டு வந்த இவளுக்கு நான் என்ன முறையில் தம்பி" என்று சிந்திக்கிறான். வெட்கமும், துக்கமும் இவனைக் கொன்று குவித்தன. அவளோ அனுயாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். இவனுக்கு ஆத்திரம் கட்டுக்கடங்காமல் வந்தது. அக்காவாம்! சின்னம்மா மகளா! பெரியம்மா மகளா! நான் வயதிற் சற்றுக் குறைந்தவன் என்பதற்காக அல்லவா, தம்பி என்று எள்ளி நகையாடி விட்டாள் இந்த எழிலாள். சும்மா விடக்கூடாது இவளை என்று நினைக்கிறான்.

இதோ பார் என்னைச் சாமானியமாக எண்ணிக் கொண்டாய்; மனம் விரும்பி நீ வரவில்லை. மந்திரத்தால் உன்னை அழைக்கிறேன் பார். செலவும் அதிகமல்ல. கொஞ்சம் மண்ணைக் குவித்து வைப்பேன். அதில் ஒரு மாங்கொட்டையை நாட்டுவேன். தேங்கா யொன்றை உருவேற்றுவேன். அப்புறம் நீயே என் காலடிக்குத் தேடி வர வைக்கிறேன் பார்" என்றவன் திரும்பிப் பாராமல் நடந்தான்.

மண்ணைக் குவித்து
 மாங்கொட்டை
 நாட்டிவைத்து
தேங்காய் உருவேற்றி
 உன்னைத்
 தேடிவர வைச்சிடுவேன்.

அவள் மீண்டும் சிரித்தாள். மந்திரத்தால் ஒரு மங்கை மதிமயங்குவாளோ? என்பதுபோல இருந்தது அச் சிரிப்பு.

---


# இலக்கிய மஞ்சரி

(3, 4, 5, 6, 7ஆம் புத்தகங்கள்)

(வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன)

சுவைத்துத் தாமே கற்கவேண்டிய ஒரு பாடத்தை வற்புறுத்தலின்பேரில் மனனமாக்கி நரகவேதனையை அனுபவித்த மாணவரையும், ஓரளவிற்கு ஆசிரியரையும் மேற்படி கஷ்டத்தினின்றும் நீக்க இவ் விலக்கிய மஞ்சரித் தொகுதிகள் உதவி புரியும். பாலரின் மனப் பண்புக்கும் அவர்களது இரசஞான விருத்திக்கும் பொருத்தமான பாடங்களை இந் நூல்கள் கொண்டுள்ளன.

இந் நூல்கள் ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளில் 3, 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களிற் கற்கும் மாணவருக்குத் தமிழ் இலக்கிய பாட புத்தகங்களாக உபயோகிக்கத் தகுந்தவை.

| | | ரூ. ச. |
|---|---|---|
| மூன்றும் புத்தகம் | — | –60 |
| நான்காம் ,, | — | –65 |
| ஐந்தாம் ,, | — | –75 |
| ஆறாம் ,, | — | 1–00 |
| ஏழாம் ,, | — | 1–25 |

சுன்னுகம்: தனலக்ஷ்மி புத்தகசாலை

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


---

## ஆசிரியர் கந்தையா

### சேவைக்குப் பாராட்டு

காரைநகர் இந்துக்கல்லூரியிற் சென்ற 40 வருடங்களாகக் கடமையாற்றிச் சமீபத்தில் இளைப்பாறிய திரு. ஆர். கந்தையா அவர்களுக்கு ஒரு பிரிவுபசாரக்கூட்டம் சென்ற 22-9-55 சனிக்கிழமை மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு நியாயவாதி திரு. ஏ. வி. குலசிங்கம் அவர்கள் தலைமைவகித்து ஆசிரியர் கந்தையா அவர்களின் குணாதிசயங்களைப் பாராட்டிப் பேசினார். பின்னர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு. வி. வீரசிங்கம் எம். பி. அவர்கள் இளைப்பாறிய ஆசிரியரின் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தபின் வழக்கறிஞர் அ. அருளம்பலம், ஜே. பி, திரு. ஏ. எஸ். கந்தையா ஜே. பி, திரு. என். பொன்னம்பலம், திரு. ஏ. தம்பிப்பிள்ளை, இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. தியாகராசா ஆகியோர் அவரது திறமை, குணாதிசயம், சேவையுணர்ச்சி ஆகியவற்றைப் பாராட்டிப் பேசினர்.

—நிருபர்

---

## இன்பமும் துன்பமும்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் பிறருக்கு உதவமுடியும்? காட்டையும் வனாந்திரத்தையும் நோக்கி ஓடி ஒளிப்பவன் பிறருக்கு உபகாரமாய் இருக்க முடியாது. தன்னையே வாட்டி வதைக்க நினைப்பவனுக்கு பிறரைப் பற்றிய அக்கறை ஏது? இவர்கள் பிறருக்கு உபகாரமாய் அமையாவிட்டாலும் பாதகமில்லை, பாரமாக வேறு இருக்கிறார்களே! கஷ்டத்திற்கு விமோசனம் தேடப்புறப்பட்டு எல்லோருக்குமே கஷ்டத்தைக் கொடுக்கிறார்கள்!

"நிச்சயமாக நாம் உங்களை, பயம், பசி, பொருள் இழப்பு, உயிர் இழப்பு, பலன்களின் இழப்பு ஆகியவற்றைக்கொண்டு சோதிப்போம் (இத்துன்பங்கள் நேரும்போது அவற்றைப்) பொறுத்துக்கொண்டு "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம் நிச்சயமாக அவனிடத்தே மீளுவோம்" என்று கூறுவோருக்கு (நபியே! நீர்) "நன்மாராயம் கூறுவீராக!" என அறிவுறுத்துகிறது திருமறை. (2;155,156)

மனதைத் தேற்றிக் கொள்வதற்காகச் சொல்லப்படும் வரட்டு வேதாந்தம் என்று இதைச் சிலர் நினைக்கலாம். உள்ளதை உள்ளபடி அவர்களே சீர்தூக்கிப் பார்க்கட்டும்; பரிகாரம் சொல்லட்டும்.

வசதிகளையும் சுகத்தையும் தேடுகிறோம் ஆனால் கஷ்டங்களிலிருந்து தப்பமுடியவில்லை. எதிர்பாராதவைகள் (?) எதிர்ப்படுகின்றன நிலையான இன்பத்தைப்பெற. முடிகிறதில்லை. உடல் வாட்டமும் மனவருத்தமும் நேராதிருக்க உத்தரவாதம் கிடைப்பதில்லை. நீங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கசப்பான சோதனைகள் வந்து போய்க் கொண்டுதானிருக்கின்றன. இந் நிலையில், சந்தோஷமாக மன நிறைவுடன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வதெப்படி? எண்ணியெண்ணி மனம் விம்மிப் புண்ணாவதெப்படி? ஆகையால் துக்கத்தைத் துடைக்க—துக்கத்திலும் சுகம் காண—உள்ள வழியை ஏற்றுக் கொள்ளுங்கள். அதுடன் மட்டுமன்றி, பரந்தமனப்போக்கிற்கும் இரக்க சிந்தனைக்கும் நீங்கள் எடுத்துக்காட்டுகளாக அமைந்து விடுகிறீர்கள். பிறர் மதிப்பில் உயர்ந்தவர்களாகி விடுகிறீர்கள். நீங்கள் உண்மையாகவே கண்ணியப்படுத்தப் படும் பொழுது அடையும் இன்பமே அலாதியானது.

—மணி விளக்கு

---

## மொழிச் சிக்கல்

### பொதுசனவாக்கெடுப்பு

### புத்தபிக்குகள் கருத்து

சிங்களத்தை மட்டுமே அரசகரும மொழியாக்குவதற்கு முயற்சி செய்துவரும் பிக்குகள், மொழிச் சிக்கலைப் பொதுமக்களே தீர்த்துவைக்கவேண்டுமெனக் கருதுகின்றனர். இது சம்பந்தமான பொதுமக்கள் வாக்கெடுப்பு நடாத்தவேண்டுமென அரசினரை வற்புறுத்துவதுபற்றி இந்தப் பிக்குகள் யோசனை செய்து வருகின்றனர் எனத் தெரிகின்றது.

---

## ஹிட்லர் செய்தி

1945ஆம் ஆண்டு ஏப்பிரல் 30ஆம் திகதி ஹிட்லரின் பிரேதத்தின் மீது ஒரு போர்வையை எறிந்து அது எரிவதற்குத் தாம் உதவியதாக ருஷியச் சிறையிலிருந்து விடுதலைபெற்று பேர்லினுக்கு வந்துள்ள ஹிட்லரின் சேவகரான ஹய்ன்ஸ் லிஞ்சே தெரிவித்துள்ளார்.



# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

## அத்தியாயம் 15

பிட்டுக்கு மண் சுமந்த பெம்மானின் முதுகிலே பட்ட அடி, சர்வ ஜீவ ராசிகளின் மீதும் விழுந்தது. நடராஜனின் மனதைத் துளைத்த சொல்லம்பும் கந்தையாவின் வீட்டில், எல்லார் மனதையும் உடலையும் கூட, வெள்ளெருக்கஞ் சடைமுடியானைத் துளைத்துத் தடவிய இராம பாணம்போல வதைத்துக் கொண்டிருக்கையில் நடராஜன் கொழும்பிலே தன் விடுதியிற் பைத்தியம் பிடித்தவனைப்போல இருந்தான்.

சாயந்தரம் ஆறுமணியாகியபோது அவன் நண்பன் தியாகராஜா, கொழும்பை ஒருவளையம் வளைத்துவிட்டு வந்தான். நடராஜனைக் கண்டபோது அவன் 'ஹலோ' என்று சத்தம்போட்டு "ஏன் திடுதிப்பென வந்துவிட்டாய்?" என்ருன்.

"சும்மா வந்துவிட்டேன்" என்ருன் நடராஜன். தன் உருவைக் கரந்து எவர்க்குந் தெரியாமல் இருக்கும் இறைவனை 'ஆபத்பாந்தவன்' என்பார்கள் அடியார்கள். இந்தச் 'சும்மா' என்ற சொல்லையும், ஆதி சிவன் தமிழைப் பெற்று அகத்தியனரிடம் கொடுக்கையில் அச் சொல்லிற்குத் தன் தேவாம்சத்தையும் சேர்த்தே கொடுத்துவிட்டான் போலும். இல்லாதுவிடின் இக்கட்டான நேரங்களில் இந்தச் 'சும்மா' என்ற சொல் தமிழனுக்குக் கை கொடுத்து உதவமுடியுமா?

தியாகுவின் கேள்விக்கு நேரடியான விடையளிக்க இயலாதபோது நடராஜனுக்கும் இந்தச் 'சும்மா' என்ற சொல் ஆபத்பாந்தவனுக உதவிற்று.

தியாகுவும் சிரித்துக்கொண்டே 'சும்மா'தான் சொல்லேன், திங்கட்கிழமை தானே வருவேன் என்று எழுதியிருந்தாய். அதற்குள் ஏன் வந்துவிட்டாய்! தேர்தலில் தோல்வியடைந்ததாலா?

தேர்தற்காகவா நான் போனேன்! என்று திருப்பிக் கேட்டான் நடராஜன்.

"கனகத்துக்காகத்தான் நீ போனுய் என்பது எனக்குத் தெரியும். அதுதான் கேட்கிறேன். ஏன் இன்றைக்கே திரும்பி வந்துவிட்டாய்? கனகம் துரத்திவிட்டாளா?" என்று கேட்டுக்கொண்டே சிரித்தான் தியாகு.

ஆம், தியாகு சிரிக்கப் பிறந்தவன்; சிரிப்பதுதான் அவன் தொழில். 'மெடிக்கல்' கல்லூரிப் பிரவேசப் பரீட்சையில் மூன்ருந் தடவையும் தோல்வியடைந்தபோது அவன் தகப்பனுர் 'நாயே, பேயே' என்று அவனைப் பேசினுர். அப்போது அவன் சிரித்தான். அடுத்த வருடம் வைத்தியக் கல்லூரியிற் புகுந்தவன் மூன்று வருடங்கட்குப் போன நிலையிலேயே அசையாமலிருந்ததைக் கண்டு அவன் தந்தையார் இப்படி உருப்படாத பிள்ளையைப் பெற்றதற்காகத் தன்னைத்தானே நொந்துகொண்டபோதும் அவன் சிரித்தான். கடைசியாய் 'டக்டர்' ஆகத்தான் வரமாட்டாய் 'ஒரு அப்போதிக்கரியாக வாவது ஆகித் தொலை' என்று அவனை ஆசீர்வதித்தபோதும் சிரித்தான். நடராஜன் ஏதோ சோகமாக இருக்கிருன் என்று அவன் முகத்தைப் பார்த்து அறிந்திருந்தாலும், இப்போதும் தியாகு சிரித்தான்.

நடராஜனுக்கு அவன் சிரிப்பதைப் பார்த்ததும் எரிச்சலாக இருந்தது. "என்னைத் தொந்தரவு செய்யாமற் போடாப்பா" என்று சலித்துக்கொண்டான்.

"ஏன் வந்தாய்? என்பதைச் சொல்லிவிடேன். நானும் தொந்தரவு செய்யமாட்டேன்" என்ருன் தியாகு.

'பிறகு சொல்கிறேன்; இப்போ என்னைக் கரைச்சல் பண்ணுதே" என்ருன் நடராஜன்.

'ஏன் இப்ப சொன்னுல் என்ன?" என்றுகொண்டே தியாகு கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு அவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

தியாகுவின் குணம் நடராஜனுக்குத் தெரியாதா? இனி விஷயத்தையறியாமல் அவன் விடப் போகிறதில்லை என்றெண்ணிய நடராஜன், தான் ஏன் முன்னுடியே வந்துவிட்டேன் என்பதற்கு நேரான விடையை, தன் மாமனுர் தன்னை அவர் வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொன்னதைமட்டும் சொன்னுன்.

அவன் சொன்னதைக் கேட்டதும் தியாகு அலட்சியமாகக் கேட்டான். "வரவேண்டாம் என்று சொன்னுர். வரமாட்டேன் என்று நீயும் வந்துவிட்டாய்? அதற்காக ஏன் இப்படிப் பைத்தியம் பிடித்தவனைப் போல இருக்கவேண்டும்?"

"அப்போது கனகம்?" சோர்ந்து கிடந்த நடராஜன் கதிரையிற் சற்று நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டே ஆவலுடன் கேட்டான். தியாகு ஏதாவது நல்லவழி சொல்வான் என்ற நம்பிக்கை அவனுக்கு.

தியாகு மறுபடியும் சிரித்துக்கொண்டே "கனகமா? அவள் கூடப் போய்விட்டால் உனக்கென்ன நட்டம்? கிடைத்தவரை இலாபந்தான் என்றெண்ணிக்கொள். விட்டுத் தள்ளு கழுதையை" என்ருன்.

தியாகு கூறிய சுருக்கு வழி நடராஜனுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது. அவன் சுபாவமே தனக்குத் தெரிந்திருந்தும் தியாகுவிடம் ஏன் இப்படிக் கேட்டோம் என்றிருந்தது அவனுக்கு. அவன் மௌனமாகவேயிருந்தான்.

தியாகுவுக்கு மேசையின் மேலேயிருந்த தந்தி அப்போது கண்ணிற் படவே அதை எடுத்துப் படித்தான். 'திருகோணமலைக்கு வந்தும் சாதிக்க முடியவில்லை. விரிவான கடிதம் தொடர்கிறது' என்று செல்வராஜன் அடித்த தந்தி அது. அதைப் படித்ததும் தியாகு நடராஜனைப் பார்த்து 'மச்சான் தந்திகூட அடித்திருக்கிருனே' என்ருன்.

### தெளிவுரை

நடராஜன் அப்போதும் மௌனமாகத்தான் இருந்தான். உள்ளுக்குள்ளே யுகாந்தகால அக்கினிபோலப் பெரு நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கையில் அதன் செந்நாக்குகள் தழுவிக் கருகிய மலர்போல அவன் முகம் இருண்டு கிடந்தது.

தியாகுவுக்கு அவன்மேற் பரிவுண்டாயிற்று. எப்படியும் அவனைச் சமாதானப் படுத்த வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொண்டே, "மச்சான் நடந்தது நடந்து விட்டது. அதை எண்ணித் துக்கப்படுவதில் அர்த்தமில்லை. நடக்கப்போகிறதைப் பிரமாதப் படுத்தி எண்ணிக் கலங்குவதிலும் கருத்து இல்லை. அலுத்துக் கொள்ளாமல் வா! இன்றைக்கு ஆனந்தாக் கல்லூரிக் காணிவலுக்குப் போவோம்" என்ருன்.

"நான் வரவில்லை; என்னைக் கூப்பிடாதே" என்று எரிந்து விழுந்தான் நடராஜன்.

தியாகு அப்படியே கொஞ்சநேரம் இருந்துவிட்டுத் தன்பாட்டிற்குப் பாடினுன்.

"இந்நாள் இனிய நாளானுல்
இறந்தநாளுக் கிரங்குவதேன்
பின்னுள் எண்ணிக் கலங்குவதேன்
பெண்ணே கிண்ணம் நிறையம்மா"

பாட்டைப் பாடி முடித்ததும் தியாகு நடராஜனை ஓரக் கண்ணுற் பார்த்தான், தான் பாடிய உமர்கையாமின் கவிதை நடராஜன் முகத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமலிருந்தது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனுலும் நம்பிக்கையை இழக்காமல் மறுபடியும் நடராஜனின் கைகளைப் பிடித்துக்கொண்டே "மாமனுர்தானே அப்படிச் சொன்னுர். அதற்காகக் கனகத்தைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? அவள் இருந்தமாதிரித்தானே இருக்கிருள்?" என்று கேட்டான்.

"அவள் அப்படித்தான் இருக்கிருள். ஆனுல் நான் அவள் வீட்டில் இனி அடி எடுத்துவைக்கமாட்டேன்" என்ருன் நடராஜன்.

'உன்னை யார் இப்போது அங்கு போகச்சொல்கிருர்கள். ஆனந்தாக் கல்லூரிக் காணிவலுக்குத்தானே வரச் சொல்கிறேன். அது உன் மாமாவின் காணி இல்லையே" என்ருன் தியாகு.

நடராஜனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனுல் அந்தச் சிரிப்பு உதய சூரியனைக் கண்டு மலரும் தாமரையின் செழுமையான சிரிப்பல்ல. மின்சார விளக்குகளின் ஒளியிலே மின்னும் கடதாசிப் பூவின் காய்ந்த சிரிப்புத்தான். ஆனுலும் தியாகுவுக்கு இது ஒரு வெற்றி தானே.

ஆனுல் அதற்குள் நடராஜன் "நான் வரவில்லை; எனக்கு அலுப்பாயிருக்கிறது. நாளைக்குப் போகலாமே" என்றபோது தியாகுவுக்கு ஏமாற்றமாக இருந்தது. எந்த விஷயத்திலுமே ஆழ்ந்த சிரத்தை எடுத்தறியாத அவனுக்கு அலுத்துப்போயும் விட்டது. நீரை விலக்கிப் பாலையட்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918 ஆம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபா

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்

ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப் பணம் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு 100 ரூபா திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதிசராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள 'நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

[A169]



## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11088

காம்பன்

P. மனவல்பிள்ளை போல்பிள்ளையும் பெண் மேரி அஞ்சலாவும்.

வழக்காளி

சரவண நாகமுத்து நடராசாவும் பெண் பாக்கியலெட்சுமியும்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11088ஆம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுச் காணியை 1955ஆம் வருடம் கார்த்திகை மீ 26உ சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1625/உம் 6–4–54 தொடக்கம் 27–7–54 வரைக்கும் ரூபாய் 1000க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 179-83 அதில் ரூபாய் 100 கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை "பெரிய கவடு" பா. செல். இல. 15 எல்லை: கிழக்கும் மேற்கும் வயிரமுத்து ஆறுமுகத்திற்கும் மருபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, செல்லப்பா பெண் அன்னம்மாவுக்கும் மருபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, அகதோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளைக்கு உரிய ஆதனம். இதடங்கலும்.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோயிற்பற்று வேலணை மேற்கு இறை "மாட்டு வயல்" பா. செல். இல. 18உம், எல்லை: கிழக்கு, அப்பாக்குட்டி பெண் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு, வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்குரிய ஆதனம். மேற்கு, முத்தையா பெண் சரஸ்வதிக்கும் மருபேருக்குமுரிய ஆதனம், தெற்கு, கார்த்திகேசு சின்னையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

ச. அம்பலவாணர்
Commissioner & Valuer
19, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம். 13-10-55

[A223]

# மாணவர் விஞ்ஞானம் - 22

அம்பி


## மின் கலங்கள்

இருள் கவிந்த இரவுகளில், வெளியே செல்லும்போது நாம் கைமின் விளக்கு (Torch-light)க் கொண்டு செல்வது வழக்கம். அதில், மின்விளக்கு எரிவதற்கு மின் அருவியை எங்கிருந்து பெறுகிறோம்?

வழக்கமாக, றேடியோவைத் தொழிற்செய்ய மின் அருவியை உபயோகிக்கிறார்கள். ஆனால், மின் அருவியில்லாத இடங்களில் மின்கல றேடியோ (Battery Set Radio) உபயோகிக்கிறார்கள். அந்த மின் கலங்கள் தாம் என்ன?

*     *     *

மின்சுமைகள், ஏற்றப்பட்ட பொருள்களிலேயே தங்கிநிற்குமாயின், அம் மின்சாரம் 'நிலை மின்சாரம்' எனப்படும். ஆனால் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பாய்ந்து செல்லும் மின்சாரம், அருவி மின்சாரம் (Current electricity) எனப்படும். அருவி மின்சாரத்தை அளிக்கின்ற மிகவும் சாதாரணமான கருவி 'வல்டா' (Volta) என்னும் இத்தாலிய விஞ்ஞானியாற் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கருவி "சாதாரண வல்டாய்க் கலம்" (Simple Voltaic Cell) எனப்படும். நாமே அதை மிகவும் இலகுவாகச்செய்து கொள்ளலாம்.




A.     B.

படம் B

1. செப்புத்தகடு.
2. நாகத்தகடு.

படம் A

1. மங்கனை இருதீயதையும் கரித்தூளும்.
2. நவச்சியப் பாசிதைக் கரை நீர்.
3. இரசக்கட்டுள்ள நாகத் தகடு.
4. கரிக்கம்பி.

### சாதாரண வல்டாய்க் கலம்

ஒரு பளிங்கு முகவையில், சிறிதளவு நீர் கலந்த கந்தக அமிலம் (Dilute Sulphuric Acid) எடுக்கவும். அதனுள் ஒரு செப்புத்தகடும் படம் (படம் B-1) ஒரு நாகத்தகடும் (Zincplate–படம் B-2) ஒன்றையொன்று தொடாத நிலையிலே வைக்கவும். அவற்றின் மேல் நுனிகளை ஒரு மின் கடத்துக்கம்பியினால் இணைத்தால், செப்புத்தகட்டிலிருந்து நாகத்தகட்டை நோக்கி, கம்பியினூடாக ஒரு மின் அருவி பாயும். இவ் வுண்மையைச் சோதித்து அறியவேண்டுமா? அக் கம்பியினருகே ஒரு காந்த ஊசியைக் கொண்டு செல்லவும்; அப்பொழுது, அவ் ஊசி விலக்கமடையும்.

இவ்வண்ணம் மின்-அருவி ஏற்படுத்தும் கருவி 'மின் கலம்' எனப் பெயர்பெறும், சாதாரண வல்டாய்க் கலத்தில், செப்புத் தகட்டை நேர்மின்வாய் (Positive Electrode) என்றும் நாகத்தகட்டை எதிர்மின்வாய் (Negative Electrode) என்னும் சொல்வார்கள்.

சாதாரண வல்டாய்க் கலத்திலும் பார்க்கச் சிறந்த கலங்கள் பல இருக்கின்றன அவற்றுள் டானியல் கலம் (Daniel cell) லக்ளாஞ்சியின் கலம் (Leclanche's cell) உலர்ந்த கலம் (Dry cell) ஆகியவற்றை மட்டும் இப்பொழுது கவனிப்போம்.

### டானியல் கலம்

இக் கலத்தின் வெளிப் பாத்திரம் ஒரு செப்புப் பாத்திரம். அதனுள்ளே செப்புக் கந்தகைக் கரைநீர் (Copper Sulphate Solution) உண்டு. அதனுள் நீர் கலந்த அமிலங் கொண்ட ஒரு நுண் துவாரச் சாடி (Porous Pot) உண்டு. இரசக்கட்டுள்ள நாகத்தகடொன்று, கந்தக அமிலத்தினுள்ளே வைக்கப்பட்டிருக்கும். வெளிப்பாத்திரமாகிய செப்புப்பாத்திரம், இக் கலத்தின் நேர் மின்வாய்; நாகத்தகடு, இதன் எதிர் மின்வாய்.

### லக்ளாஞ்சியின் கலம்

இக் கலத்தின் வெளிப் பாத்திரம் பளிங்காலானது. (படம் A). அதனுள்ளே நவச்சியப் பாசிதை கரை நீர் (Ammonium Chloride Solution) இருக்கும். இரசக்கட்டுள்ள நாகத்தகடொன்று, அதனுள் வைக்கப்பட்டிருக்கும். அதுவே இக் கலத்தின் எதிர் மின்வாய். ஒரு நுண்துவாரச்சாடியுள், ஒரு கரிக்கம்பி வைத்து, அச் சாடியுள் கரியும் மங்கனை இருதீயதை (Manganese Dioxide) யுஞ் சேர்ந்த ஒரு கலவையும் இடப்பட்டிருக்கும். அச்சாடி அப்படியே பளிங்குக் கலத்தினுள் உள்ள நவச்சியப் பாசிதைக் கரைநீருள் வைக்கப்பட்டிருக்கும். அக் கரிக் கம்பியே, இக் கலத்தின் நேர் மின்வாய்.

### உலர்ந்த கலம்

உலர்ந்த கலங்கள் ஒரு வகை லக்ளாஞ்சி கலங்களே. அவை, இடத்திற்கு இடம் இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய முறையில், திரவங்கள் இல்லாமற் செய்யப்பட்டுள்ளன. சிறிய உருளை வடிவமுள்ள உலர்ந்த கலங்கள் தாம், கை மின் விளக்குகளில் உபயோகிக்கப்படுகின்றன.

இக் கலத்தின் வெளிப் பாத்திரம் ஓர் நாக உருளை. அதனுள், நவச்சியப்பாசிதைக்களியும் உறைகளியுஞ் (Plaster of Paris) சேர்ந்த ஒரு கலவை இருக்கிறது. அதன் நடுவே, ஒரு கரிக் கம்பியும் அதைச் சுற்றி மங்கனை இருதீயதை, கரித்தூள் ஆகியவையும் இருக்கின்றன.

வெளிப் பாத்திரமாகிய நாக உருளை, இக் கலத்தின் எதிர்மின்வாய். நடுவேயுள்ள கரிக்கம்பி, இதன் நேர்மின் வாய். அக் கரிக் கம்பியின் மேல் நுனி ஓர் உலோக மூடியால் மூடப்பட்டிருக்கும். கலம் முழுவதும், ஒரு காகித உறையுள் வைக்கப்பட்டிருக்கும்.

இக் கலத்தை உலர்ந்த கலம் என்று கூறினாலும் உண்மையில் இதன் உட்பகுதி உலர்ந்துவிட்டால் இது தொழிற்செய்யமாட்டாது.

மின் கல றேடியோக்களுக்கு, அளவிற் சற்றுப் பெரிதாக உள்ள உலர்ந்த கலங்கள் உபயோகிக்கப்படுகின்றன. வேறுவகையான கலங்களும் உபயோகிக்கப்படுகின்றன. இவ் உலர்ந்த கலங்கள் உபயோகமாகி முடிந்ததும் எறியப்படுகின்றன. சேமங்கள் (Accumulators) எனப்படும் கலங்கள், மின் சுமையேற்றியை உபயோகிக்க உதவுகின்றன.

---

## கொழுகொம்பு

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் பருகும் அன்னத்தைப் போல, வாழ்வின் துன்பத்தை மறந்து, இன்பமொன்றையே அனுபவிக்கத் தெரியாத நடராஜனைப்போன்ற பிரகிருதிகளைப் பார்த்துச் 'சிரி சிரி என்று சிரிக்க எண்ணினான். ஆனாலும் தன் நண்பனுக்காக அந்தச் சிரிப்பையும் அன்றிரவு அவனுக்கு இருந்த மற்றைய திட்டங்களையும் கைவிடத் தீர்மானித்துக் கொண்டான்.

நடராஜனை வலுவில் இழுத்துக்கொண்டுபோய் இருவரும் சாப்பிட்ட பிறகு படுக்கையில் வீழ்ந்தனர். சில நிமிடங்களில் தியாகு விட்ட குறட்டை நிசப்தமான அந்த இரவைக் காலத் துண்டங்களாக அறுக்கத் தொடங்கியது.

நடராஜன் "கனகம் எப்போதும் போலத்தானே இருக்கிறாள்" என்று தியாகு சொன்னதை நினைத்துக் கொண்டே படுத்தவன் நித்திரையாகிப் போய்விட்டான்.

அப்போது "நடராஜன் இங்கேதான் இருக்கிறானா?" என்று கேட்டுக்கொண்டே அவன் மாமனார் கந்தையா வந்தார்.

—தொடரும்

---

### லியாக்கத் அலிகான்

#### ஏறாவூரில் நினைவு விழா

ஏறாவூர் தமிழ் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், மன்றத் தலைவர் எஸ். கே. எம். ஏ. காதர் தலைமையில் லியாக்கத் அலிகான் நினைவு விழா கொண்டாடப்பெற்றது. ஜனாப்கள் யூ. எல். எம். ஹனிபா, எஸ். எம். மீராமுகைதீன், ஐ. எல். எம். ஹனிபா ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினர்.

---

## சு. வே.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணைத்துவிட்டாய்; இனி மறுபடியும் அந்தச் சோதி தோன்றுமா? அரசன் ஜீவகாருண்ய வெறியால் துஷ்ட நிக்ரகத்தை ஒழித்துவிட்டான் என்பது உனக்குத் தெரியுந்தானே. அப்பொழுது மந்திரிப் பதவியிலிருந்த நீ, இடித்துரைத்தனையே. உனக்கும் அரசனுக்குமிடையே வஞ்சனைப் படுதாவை நீயே விரித்துவிட்டபோது அவையெல்லாம் எப்படித் தெரியும்? நீ உண்மையான வீரனுயிருந்தால், வீர இரத்தம் உன் தேகத்தில் குதித்தோடிப் பாய்ந்துகொண்டிருந்தால், ராஜபக்தி உன் இருதயத்தில் ஆழமான வடுக்களைப் பொறித்திருந்தால், இந்தச் சூழ்வினையை இயற்றவும் எண்ணுவாயோ? ஏ! வன், னெஞ்சா! கொல்லாவிரதத்திற்காக அரசியலைத் துறந்த வள்ளலாகச் சங்கபோதியை இதோ சரித்திராசிரியர்கள் பொறிக்கப்போகிறார்கள்; ஆனால் அதே கைகள் அரசனைக் கொலைக்காக்கினவன்; வன்னெஞ்சன்; துரோகி; கருணையற்றவன் என்றல்லவா உன்னைப் பொறித்து விடப்போகின்றன.''

மனித மிருகம் என்ற கதை யாழ்ப்பாணப் பகுதியின் அநாகரிக சின்னமாக – கொடுமையின் சிகரமாக உள்ள வேள்வியைப்பற்றியது. 'ஆடுகதறியது' என்று நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்களின் கவிதை அழியாத சித்திரமாக, இதை எடுத்துக் காட்டுகிறது. இத்தமனித மிருகம் என்ற கதையும் ஓர் அரிய சித்திரந்தான். ஆட்டை அவர் வர்ணித்திருப்பதைப் பாருங்கள்:

"வெண்மையான மேனி; அதற்கு மெருகிட்டது போலக் கருநிற மயிர்கள். பிடரியிலிருந்து அதன் 'குட்டை' வால்வரையும் பரந்திருந்தன. வெண்மையிலே தளதளக்கும் ஜொலிப்பு; கட்டமைந்த சதைப்பிடிப்பு, —இவை அதன் தோற்றத்திற்கு ஒரு பொலிவையளித்தன. அதன் சாதிக்கேற்ற குணம் அதன் முக ஒளியிற் பிரதிபலித்தது. இத்துடன் முறுகியெழுந்த கொம்புகளும் மடிந்து கன்னத்தைத் தடவுஞ் செவிகளும் அதன் கம்பீரத்துக்கு ஒரு 'நகாஸ்' வேலை செய்துவிட்டன. தாடையின் கீழ்ப்புறத்திலே வெண்ணிறத் தாடி முன்னோக்கி வளர்ந்திருந்தது, பருவத்தின் அறிகுறியாக...''

ஒரு சமூகத்துடன் பழகச் சந்தர்ப்பம் கிடைப்பதனாலேயே அதனிடம் ஓர் ஈடுபாடு உண்டாகிவிடுகிறது. வெளிப்பகட்டிலும் பார்க்க உள்ளழகு தான் பிரதானமாகத் தோன்றிய மாசில்வா மணி தன் நண்பனுக்குப் பின்வருமாறு எழுதுகிறான். "எந்தத் தீண்டாதாளின் உள்ளழகில் என் மனதைப் பறிகொடுத்தேனோ அந்தப் பெண்ணையே நான் விவாகம் செய்யத் தீர்மானித்து விட்டேன்......'' இந்தத் தத்துவத்தினின்றும் பிறந்த சிந்தனைக் கோவைகளைப் பின்னி வைதீகத் திரையைப் பிய்த்தெறிந்து மனித உயர்வைக் காட்டும் மனநிழல் என்ற கதையும், அநாதையாக வளர்க்கப்பட்டும் பெரிய தாயின் கொடுமையில் அல்லலுற்றும் வாழ்ந்த கமலம் என்ற சின்னஞ்சிறு குழந்தை, தான் கடைக்குக் கொண்டுபோகும் அப்பத்தில் ஒன்றை அநாதையான பையன் ஒருவனுக்குக் கொடுத்து அதனாற் பட்ட துன்பத்தைப் பொறுத்துக்கொண்ட அன்புக் கறை என்ற உணர்ச்சிச் சித்திரமும், வேகமும் துடிப்பும் கொண்ட சிற்றன்னையும் அவரை என்றென்றும் ஞாபகத்தில் வைத்திருக்கப் போதுமானவை.

சிறு கதை ஆசிரியர்களிற் பலர் பல கோணங்களிற் பார்வையைச் செலுத்தாமை காரணமாகக் காதல், காமம் என்ற இரண்டினுள்ளுமே சுற்றிச் சுற்றி வருவதை நாம் காணலாம். பாற்காவடி எடுத்த பெண், ஈழத்துக் குமணனாகிய சங்கபோதி, அருமையாக வளர்த்த ஆட்டை ஏதோ ஒரு உணர்ச்சியினாலே சுதந்திரமாக அவிழ்த்துவிட்ட ஒரு ஹரிஜனப் பக்தன், தன்னைப் போல் அநாதையான ஒரு பையனுக்கு எப்போதும் ஒவ்வொரு அப்பத்தைக் கொடுத்த சிறுமி, இப்படி அவர் கையாண்ட பாத்திரங்கள் ஒன்றுக் கொன்று எவ்வளவோ வேறானவை. இதிலிருந்தே அவரின் அவதான சக்தியையும கதைகளுக்கு விடயங்களை எப்படித் தெரிந்தெடுக்க வேண்டு மென்னும் உண்மையையும் நாம் அறிந்துகொள்ளலாம். அவருடைய எந்தக் கதையும் வெறும் காதலையும் காமத்தையும் சித்திரிக்கவில்லை என்பதையும் இந்த இடத்திற் பெருமையோடு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். சிந்தனைக்கதிர் என்ற புதுத் துறையும் அவருடையதே. அவருடைய கதைகளில் வயலும், வரம்பும், தாமரையும், குளமும், கோவிலும், கொண்டாட்டமும் அழகுற வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. காரணம: அவர் பிறந்த கிராமமே அப்படிப் பட்டதுதான். நாவற்குழியூர் நடராஜனால் நாவற்குழியை எல்லோரும் அறிவார்கள். அதே ஊர் தான் இந்த ஈழநாட்டின் இணையற்ற உருவகக்கதை சிறுகதை எழுத்தாளனையும் ஈன்றெடுத்தது. அமைதியும், ஆடம்பரமற்ற தன்மையும், அடக்கமும் உள்ள இந்த எழுத்துச் சிற்பி ஒரு தமிழாசிரியர். இப்போது ஹற்றனிலுள்ள ஓர் உயர்தரக் கல்லூரியிற் கடமையாற்றுகிறார். இனிமேல் அவர் தம் புகழை நிலைநாட்டக்கூடிய அருமையான நாவல், நாடகம் ஆகியவற்றிலும் முயன்று பார்க்கலாம்.* அதற்கேற்ற ஆற்றலும் அவருக்குண்டு. அவர் சிறுகதைச் செல்வம் வாழ்க.

— கரவைக் கவி கந்தப்பனார்

---

### 'ஈழகேசரி' விற்பனையாளருக்கு:

'ஈழகேசரி' விற்பனையாளர் தமக்கு வழக்கமாக அனுப்பப்பெறும் பிரதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ விரும்பினால் பிரதிவாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அதிபர்



# பாலர் பகுதி



அருமையான மருமக்களே!

மாரிகாலம் ஆரம்பித்துவிட்டது. உங்கள் மாமி விறகு சேகரித்து வைப்பதிலும், வீடு வாசல்களைச் சுத்தமாக்கித் திருத்தங்கள் செய்வதிலும் கவனம் செலுத்தி வருகின்றார். தொழிலாளர்களைக் கொண்டு இவற்றையெல்லாம் செவ்வனே செய்து வருகின்றார்.

பாருங்கள்! மாமி எவ்வளவு முன்னேக்குடன் காரியங்களைச் செய்து வருகின்றார் என்று. மாரிகாலத்தில் அடைமழை பெய்தால் அடுப்பு மூட்ட விறகுக்கு எங்கு போவது? ஆனபடியால் தான் நேர காலத்துடன் காய்ந்த விறகுகளைத் தேவைக்கெனச் சேமித்து வைக்கின்றார்.

'வெள்ளம் வரமுன்னர் அணை கோல வேண்டும்' என்பது முதுமொழி. வெள்ளம் வந்தபின்னர் அதனைத் தடுக்க முடியாது. இதனை உணர்ந்து, சில வேலைகளை நாங்கள் முன் எச்சரிக்கையுடன் நிறைவேற்றி வைத்தால் பின்னர் இலகுவாகிவிடும். மருமக்களுக்குப் பரீட்சைகள் நெருங்கி வரும் காலம் இது. பரீட்சைக்கு இரண்டு மூன்று கிழமைக்கு முன்னர் பாடங்களை அவசரப்பட்டு ஆயத்தஞ் செய்யாமல், ஒவ்வொருநாளும் படித்துவந்தால் எவ்வளவோ இலேசாகிவிடும். பின்னர் பரீட்சைநெருங்கும்போது 'ஐயோ! ஒன்றும்படிக்கவில்லையே' என்று அந்தரப்பட வேண்டியதில்லை. போட்டி விபரம் இங்கு வெளியாகியுள்ளது படித்துப் பாருங்கள்.

கேசரி மாமா

## மருமக்கள் போட்டி

### 2 பரிசுகள்

கிளி சொன்ன கதை என்ற தலைப்பில் மருமக்கள் ஒவ்வொருவரும் ஒரு கதை எழுதி அனுப்ப வேண்டும்.

ஒற்றை 'றூல்' அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் 3 பக்கங்களுக்குக் குறையாமலும் 4 பக்கங்களுக்குக் கூடாமலும் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதியனுப்பவேண்டும்.

ஈழகேசரி பாலர் பகுதி அங்கத்தவர்களுக்கு மாத்திரம் இப் போட்டியிற் கலந்துகொள்ளும் உரிமையுண்டு. இப்பக்கத்திலுள்ள போட்டிப் பத்திரத்தை நிரப்பிக் கதையுடன் அனுப்பவேண்டும். பின்வருமாறு விலாசமிடப்படவேண்டும்:

போட்டி முடிவு திகதி
**15-11-55**

மருமக்கள் போட்டி
கேசரி மாமா
ஈழகேசரி நிலையம்
சுன்னுகம்

## புதிய மருமக்கள்

க. பவானி (1340) 131, கட்டுகாஸ்தோட்டை வீதி, கண்டி.

த. சிறீஸ்கந்தராசா (1341) 2, சென் செபஸ்தியான்வீதி, நீர்கொழும்பு.

மு. சிவஞானம் (1342) ஸ்ரான்லி அரசினர் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

இ. தங்கராசா (1343) ஊரெழுமேற்கு, சுன்னுகம்.

க. வாடாமலர் (1344) புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

இரகுநாதன் சிவஞானம் (1345) நயினுதீவு வடக்கு, நயினுதீவு.

வி. யோகநாதன் (1346) அரசினர் கனிஷ்ட பாடசாலை, நயினுதீவு.

## மாமா மறுமொழி

ஸவாஹிர் எஸ். ஃபரீத் (916) உமது கடிதம் படித்து மகிழ்ந்தேன். பதிவு எண்ணில் தவறு ஏற்பட்டதற்கு வருந்துகின்றேன். மாத்தளைக்கு 'ஈழகேசரி' விற்பனையாளரை நியமிக்க முயற்சிப்பேன்.

சு. விசாலாட்சி (1222) மகாகவி பாரதியாரைப்பற்றி அருமையாக எழுதியிருக்கின்றீரே!

வே. த. சண்முகவேல் (226) 'தாகமும் சோகமும்' நல்ல முயற்சி.

சு. சிவபரமானந்தன் (1308) கட்டுரை கிடைத்தது. கடதாசியின் ஒருபக்கத்தில் எழுதவேண்டும்.

சு. அருட்பிரகாசம் (1322) புனைபெயரிற் கடிதங்கள் கட்டுரைகள் எழுதவேண்டாம், மருமகனே!

பவுல் நவாரஸ் பெர்னன்டோ (1310) 1322 இலக்கத்துக்குஎழுதியுள்ள மறுமொழிதான் உமக்கும் உரியது

தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா (1341) மருமகனே! 1308 இலக்கத்துக்கு எழுதியுள்ள மறுமொழியைப் பார்க்கவும்.

அ. அ. மஹ்மூது (1293) கவிமணியின் கவிதைகள் குழந்தைகளுக்குத் தேன் போன்றவை. நீர் அவற்றை நன்கு படிக்கவேண்டும்.

## விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னுகம்.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி–பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ______________________

விலாசம்: ______________________

______________________

பிறந்த திகதி ______________________

______________________
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

## உங்களுக்குத் தெரியுமா?

— த. யோகநாதன் —

584. இமயமலையில் உள்ள மரணப்பொய்கை எது?

585. ஐரோப்பாவில் எந்த நாட்டில் விவாகமுறிவு முறை கிடையாது?

586. உலகில் உள்ள அணுசக்தி நிலையங்களுள் பெரியது எது?

587. மந்திரிசபைக்கு முதலமைச்சராகப் பதவி வகிக்கும் மன்னர் யார்?

588. ஆற்றுவரி என்பது என்ன?

589. "நமோ நமோ மாதா" என்ற இலங்கைத் தேசிய கீதத்தை இயற்றிவர் யார்?

590. ஜலவாயுவைவிடப் பிராணவாயு எவ்வளவு பங்கு கனமுடையது?

591 அணுச் சக்தியினுல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை முதல்முறையாக சமையல் வேலைக்கு உபயோகித்த பெருமை யாரைச் சாரும்?

(விடைகள் 12 ஆம்பக்கம்பார்க்க)

## அன்னை

— குகன் —

கடவுளைக்கை தொழுதுஎமைப் பெற்றவரெம் அன்னை
கருதிப்பா லூட்டிக் காத்தவரெம் அன்னை
திடமுடன்நாம் வாழுமருந் துண்டவரெம் அன்னை
தேர்ந்துபெயர் சூட்டித்தா லாட்டியவர் அன்னை.

பிணிவந்தால் உணவின்றி வருந்துபவர் அன்னை
பெருமகனுய் நாம்வாழப் பிரியமுறும் அன்னை
அணியாடை சூட்டிப்பள்ளி யனுப்பியவர் அன்னை
அங்கிருந்து வருமழகில் அகமகிழ்வார் அன்னை.

பிழைசெயினும் பொறுத்தெம்மைப் பேணுபவ ரன்னை
பெரியனெனுஞ் சொற்கேட்டுப் பெருமைகொளும் அன்னை
விழைவுடனெம் நல்வாழ்வே வேண்டிடுவார் அன்னை
வேறெதையுங் கருதாத தெய்வமெங்கள் அன்னை.

தனக்கூணும் உடையுமின்றித் தவித்தாலு மெம்மைத்
தாழ்த்தியொரு குறைகூறத் தயங்கிடுவார் அன்னை
தினைப்போதுந் தாயைமறந் திருந்தவர்க ளுய்யார்
தெய்வமெங்கள் அன்னைநலம் பேணிமிக வாழ்வாம்.

## திருந்திய சிறுவன்

இ. சந்திரராசா (1292)

இராசலிங்கத்தின் நடத்தை வரவர மோசமாகிக் கொண்டே வந்தது. அவன் பார்க்காத சினிமாப் படங்கள் இல்லை. களியாட்ட விழா எங்கு நடந்தாலும் அவன் அங்கு தவருமற் செல்வான். சாப்பாட்டு நேரங்களைத் தவிர அவனை வீட்டிற் காணமுடியாது. இரவில் பத்து மணிக்குப் பின்தான் வீட்டுக்குத் திரும்புவான். அவனை அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் மதிப்பதில்லை. மற்றைய பெற்ருர்கள் தங்கள் பிள்ளைகளை அவனுடன் சேர விடாமற் தடுத்தார்கள். இராசலிங்கம் அதை அக்கறைப்படுத்தவில்லை.

இராசலிங்கம் எஸ். எஸ். ஸி. யில் படித்துக்கொண்டிருந்தான். அவன் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. தந்தையற்ற அவன் தாயுடன் வசித்து வந்தான். அவனுக்கு மூன்று வயதுத் தங்கையும் இருந்தாள். தாய் தன் குழந்தைகளைக் கருத்தாக வளர்த்துவந்தாள். தன்மகன் தீய வழியிற் செல்வதை எண்ணி மனம் வருந்தினுள் அன்னை. பலமுறை கண்ணீர் வடித்தாள. பலமுறை ஆதரவாகப் புத்தி சொன்னுள். அவை ஒன்றையும் அவன் கருத்திற கொள்ளவில்லை.

ஊரார் எல்லாம் வெறுக்கிருர்கள். மாணவர்கள் கூடத் தன்னுடன் சேர்வதில்லை என்று இராசலிங்கத்திற்குத்தெரிந்தும் அவன் அதைபபற்றிக் கவலைப்படவேயில்லை.

ஒருநாள் அவன் தன்வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வீட்டிலிருந்து இருவர் பேசும் சததம கேட்டது. அதில் அவனுடைய பெயரும் அடிபட்டது. உடனே அவன் காதைத தீட்டிக்கொண்டு உற்றுக் கேட்டான். "இராசலிங்கத்தைக் கெடுத்தது அவன் தாய் தான்; அவன் தகப்பனிருந்தால் இப்படியாகி யிருக்க மாட்டான்" என்றது ஒரு குரல். "குடும்பத்துக்கு அவப்பெயரல்லவா தேடிக்கொடுக்கிருன்" என்றது வேறு குரல். இதைக் கேட்ட இராசலிங்கத்தின் மனம் பக்கென்றது. தன்செய்கை தன் குடுமபத்துக்கும் அன்னைக்கும் தீய பெயரைக் கொடுத்ததையிட்டுச் சிந்தித்தான். ஏதோ முடிவுடன் வீட்டை நோக்கி நடந்தான்.

அன்று பாடசாலையில் நடந்த கூட்டத்திற்குப்போயிருந்தான். ஓர் ஆசிரியர் 'மாணவர் கடமை' என்னும் விஷயம்பற்றிப் பேசினுர். பல அறிஞர்களின் வாழ்க்கை வரலாறறையெல்லாம விளக்கிக் கூறினுர். அவர்கூறியவை அவன்மனதிற் பதிந்தன. தன கடந்த செய்கையை வெறுததான். புதுவழியில் நடக்கத தொடங்கினுன்.

இராசலிங்கத்தின் மாறுதலைக் கண்ட அன்னையின் மனதில் மகிழ்ச்சி பொங்கியதும அவளடைந்த ஆனந்தத்திற்கு அளவேயிலலை. அவர்கள் குடும்பததில் அன்பு ஆட்சி புரிந்தது.

## மருமக்கள் போட்டிப் பத்திரம்

பதிவு இலக்கம்..................

பெயர்............................................................

விலாசம்............................................................

............................................................

வயது...............

............................................................
பெற்ருர் அல்லது ஆசிரியரின் ஒப்பம்

T'Phone No. 805
Registered at the G. P. O. as a Newspaper
26TH YEAR OF PUBLICATION
EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore
Founder: N. PONNIAH

| Vol. 26 | Chunnakam Sunday, Oct. 23, 1955 | No. 17 |
| --- | --- | --- |

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ.6. 00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி ச. 10. காசு 10

# சைவம் செழிக்கும் தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பக்தர், மணிவாசகர் என்ற தமிழ்ப்பெருங் குரவர்களுடைய அருட் பாடல்கள் வீடுதோறும் ஒலிக்கவேண்டும் என்று மக்களை வேண்டிக்கொண்டார்கள். ஏறக்குறைய ஒன்றேகால் மணிநேரம் அடிகள் அங்கு ஆற்றிய சைவம் செழிக்கும் தமிழ் உரையினை மெல்லிய சத்தமும் இன்றி மக்கள் அமுதெனப் பருகினர். மறுநாட் காலை மாங்கன்றொன்றை அடிகள் அப் பாடசாலையில் நாட்டினார்கள் காலை 8 மணிக்கு அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரிய கல்லூரியில் வரவேற்பு நடந்தது முஸ்லீம் மாணவர்கள் அனைவரும் சைவப்பெரியாருக்கு மதவேறுபாடின்றி அங்குச் செய்த சிறப்பினால், அடிகளாருடைய அமுத மொழிகளைப் பருகப்பெற்றார்கள்.

## சிவானந்த வித்தியாலயத்தில்

மட்டக்களப்பு எங்கணும் வரவேற்பும் அடிகளாருடைய பதிலுமாகக் கூட்டங்கள் நடந்தேறின. இவ்வித்தியாலயத் தமிழ்ச் சங்கத்தினர் ஆண்டுதோறும் தாம் நடாத்தும் பாரதிவிழாவில் அடிகளாரைக் கலந்துகொள்ளச் செய்து சிறந்த ஒரு இலக்கியவிருந்தைப் பெற்றுக்கொண்டார்கள். வள்ளுவனும், இளங்கோவும் கண்ட பேருண்மைகள் பலவற்றையும் தூங்கிக்கிடந்த தமிழர்களுக்குக் காட்டி விழிப்பூட்டிய பாரதியை நாம் அஞ்சலிசெய்து, அவரது கருத்துக்களைப் பின்பற்றவேண்டுமென்று மாணவர்களை அடிகள் கேட்டுக்கொண்டார்கள். அதன்பிறகு வடபகுதி மக்களுக்காகச் சிற்றாண்டிக் கந்தசாமி கோயிலடியில் நடந்த பெரிய வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## இரண்டாம்நாள் மாலே

13-10-55 மாலை 5 மணிக்கு நகரமக்களால் அடிகளுக்குப் பொது வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. இவ்விழாவிலே அடிகளாருடைய செயலாளராக வந்திருந்த திருவாளர் மெய்யப்பன் அவர்களும் பேசினார்கள். சாதி சமய வேறுபாடின்றி மொழிவளர்ச்சிக்காக மக்கள் ஒன்றுபட்டுச் செய்ய வேண்டிய தொண்டுகள் பலவற்றை அடிகளார் எடுத்துக் கூறினார்கள். சங்கமிருந்த காலத்தோடு நின்றுவிடாது தமிழ் வளர்ந்து வரும் சிறப்பு நிலைகளையும், தமிழ்க்கலைச் சிறப்புகளையும் விளக்கி அங்கிய கட்சிகளாலும், பிறமொழிக் கலப்பினாலும் "தமிழினைத் தூய்மைகெடச் செய்து வருபவர்களது வருந்தத்தக்க செயலினையும் கூறி, பக்தியின் மொழியாகிய தமிழின் கனிவுத்தன்மையை ஒளிரச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்குச் சற்று முன்னர்தான் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கல்லூரிக்கு அடிகளார் சென்றிருந்தார். அங்குள்ள ஆசிரிய மாணவர்களுக்கு ஏற்ப ஒரு உளநூற் போதகாசிரியர் போன்று அரிய விரிவுரை ஒன்றை அடிகள் ஆற்றி எல்லாரையும் வியப்புக்குள்ளாக்கினர். அதன்பின்னர் நடந்த பொதுவரவேற்பில் கலந்து மாலை 7மணி வண்டி மூலம் அடிகளார் கொழும்பு சென்று விட்டனர்.

## ஈழகேசரிக்கு வாழ்த்து

ஈழகேசரியின் சார்பில் அடிகளாரைக் கண்டபோது இன்முகம் தந்து இதனைக் கூறினார்கள்.

"அமுதம் குழைந்த தமிழ்மொழி; செய்யுளில் ஆற்றல் படைத்து நிற்க அம்மொழியின் வசனத்திலும் உயிர் உண்டு என்று தமிழுலகத்தின் சிறப்பினை எடுத்து நிறுத்திய காவலர் பிறந்த திருநாட்டின் பிரதிநிதி ஈழகேசரி. சிறந்த நன்னோக்குடன், நீண்ட காலமாகத் தமிழுக்கு அரிய தொண்டாற்றிவரும் அவ்விதழுக்கு என்னுசிகள். தமிழும் சைவமும் உயிர்எனக் கொண்டு இதுவரை வாழ்ந்த நாவலர் பெருமானது வழித்தொண்டை அது நீடு வளர்க்குமாக."

## அருள்நெறி ஆதீனம்

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் கிளை ஒன்றினை இலங்கையும் விரைவிற் பெறும் என்று தெரிகிறது. மலைநாட்டிலே இவ்வாறான ஆதீனம் ஒன்றை அமைக்கும் திட்டம் உருவாக்கப்படலாம் என்றும், அதற்கு இலங்கையில் உள்ள ஒரு தொண்டன் தலைவராக இருந்து அடிகளுடைய ஆணையின்கீழ் பணியாற்றுவார் என்றும் தெரிகின்றது. இத்தகைய திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுதற்காக அருள்நெறிக்கழகத்தின் இலங்கைக் கிளைச்சபை போன்று அடிகளாரால் நிறுவப்பட்டுள்ளது. இணைப்பிரியாத தமிழ்மொழியும், சைவ அருள்ஒளியும் எங்கும் பரவுதல் வேண்டும் என்ற அடிகளாரின் பெருவிருப்பு செயலில் நிறைவுறுதற்கு இது போன்ற கிளை மடங்கள் தமிழர் வாழும் நாடுகள் எங்கும் திறக்கப்படும் என்று அறிகின்றோம்.

## விடைகள்

584. ரூப் கந்த்.
585. இத்தாலி.
586. சோவியத் அணுச் சக்தி நிலயம்.
587. யெமன் மன்னர், இமாம் அஹமத்.
588. இசைப்பா வகைகளுள் ஒன்று.
589. ஆனந்தசமரக்கோன்.
590. 16.
591 குமாரி கதி நோரிஸ்

## வாழ்வில் ஒளி

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் அன்பு உள்ளத்தைக் கசக்கிப் பிளிந்த பேய் அதற்காக இப்பொழுதும் வருந்துகின்றேன். 'பெண் புத்தி பின்புத்தி' என்பது எனக்குத்தான் சரியாகப் பொருந்தியிருக்கிறது ஒரு விபரமும் அறியாமல் நான் ஏதோவெல்லாம் உங்களைப் பற்றித் தவறாக எண்ணிவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். உங்களைக் காண வந்தஅன்று கடிதம் ஒன்று மேசையில் கிடந்தது எடுத்து வாசித்தேன். அது பார்வதி எழுதிய கடிதம்தான்.

உங்கள் அம்மா என் அன்னையுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். இடையில் பார்வதியின் கதையையும் சொன்னார்கள். உடனே இக்கடிதத்தை எழுதுகின்றேன். என் அம்மா உங்களைத் தன் மருமகனாக வரவேற்க எண்ணியிருக்கின்றார். ஆனால்; நீங்கள் என்ன சொல்வீர்களோ தெரியாது. ஏழைப் பார்வதிக்கு ஆதரவளித்த நீங்கள் உங்கள் வேணியை ஒருபோதும் புறக்கணிக்க மாட்டீர்கள். உங்கள் — அல்ல — நம்முடைய அழகனும் இக்கடிதம் எழுதும் பொழுது என் அருகிலேயே இருக்கின்றான்.

உங்கள்
மன்னிப்பைக் கோரும்
வேணி

கடிதத்தை மடித்து வைத்தேன். அம்மாவைக் கூப்பிடும் சாக்கு வைத்துக் கொண்டு வேணியின் வீட்டுக்கு ஓடினேன்.

## நமது வாசிகசாலை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேடம் பூண் டென்பயன். வேள்நெறி நிற்போர் வேடமெய்வேடமே!' என்றதையும் விளக்கப்போலும் அவை இறுதிக்கண் தரப்பட்டுள்ளன.

இவ் வுண்மைகளை யெல்லாம் நம்மனோர் அறிந்துய்யுமாறு இவ்வரிய நூலை எழுதியுதவிய சிவாச்சாரியாரவர்களுக்குச் சைவ உலகின் நன்றி என்றும் உரித்தாகும்.

116ஆம் பக்கம்—'ஆளாக்கிவிட்டுவிட்டால்' என்பது 'ஆளாக்கிவிட்டால்' என்றும், 'செய்து நின்னை' என்பது 'செய்துன்னை என்றும், 130ஆம் பக்கம்—'பிரசாதித் தருளுவர்' என்பது 'பிரசாதித்தருளுவர்' என்றும், 'அஞ்செழுத்தும் மூணர்வார்' என்பது அஞ்செழுத் துணர்வார்' என்றும் வரும் பிழைகள் போலவன தவிர்க்கப்பட வேண்டியன.

—கருணனந்தன்

இப் பத்திரிகையில் வெளிவரும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

மட்டக்களப்பில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
கலாநிதி புத்தகசாலை,
30, பெரிய தெரு,
மட்டக்களப்பு




இப் பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — குரும்பசிட்டி, முத்தையா — சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம் 'தல்லயாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.